Registered No M.—236.

கிராமாதிகாரி.

சென்னை இராஜதானியின் கிராமபரிபாலனம்
சிறப்படும்பொருட்டுப் பிரசுரிக்கப்படும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பு. 1] மனக்குடி:—1901-ஞ் ஜனவரி-மீ [நெ. 2

விஷயங்கள்.

1. நம் கிராமாதிகாரிப்பத்திரிகையின் நோக்கமும், இதை உத்தியோகஸ்தர்கள் ஆதரிக்கவும்
2. முக்கிய அறிவிப்பு.
3. செவ்விது அதிகாரம் பூண்ட மேலதிகாரிகளும், அவர்கள் அதிகாரத்துக்குட்பட்ட கிராமஉத்தியோகஸ்தர்களும்
4. கிராம முன்சீபுகளே! கர்ணங்களே!
5. கிராமாதிகாரிப்பத்திரிகாபிமானிகளுக்கோர் விண்ணப்பம்.
6. கிராமாதிகாரிப் பத்திரிகையைப்பற்றிய கடிதங்கள்.
7. கிராமாதிகாரி.
8. இப்பத்திரிகைசெய்யும்வேலை
9. விசேஷக்குறிப்பு.
10. மாட்சிமைதங்கிய மஹாராணியவர்கள் மரணம்.
11. கிஸ்தி வசூல்.
12. கிருஷிநீதி.
13. மதராஸில் வீட்டுவரி.
14. தஞ்சாவூர் ரெயில்வேக்கடன்
15. முன்சீபு மணியகாரர்களுக்கு ஓர் எச்சரிக்கை.
16. பிள்ளைகளை முன்னுக்குக்கொண்டுவரும் வழி.
17. வர்த்தமானம்.
18. பலரும் கவனிக்கத்தக்க ஓர் அறிவிப்பு.

பத்திராதிபர்,
ஸ்ரீ S. கோதண்டபாணித் தஞ்சராயர்,
மணக்குடி, திருத்துறைப்பூண்டித் தாலூகா,
தஞ்சாவூர் ஜில்லா.

கையொப்ப விபரம்:— வருஷம் 1-க்கு கிராம[illegible]உத்தியோகஸ்தர்களுக்கு ரூ. 3. இதரர்களுக்கு ரூ. 4. போஷகர்களுக்கு ரூ. 10.

Printed by:-T. B. Rengasami Pillay Manager, at the "Neelalochani Press" Negapatam, and Published by S. Kothandapani Thanjarayar, *Manakudy, Tiruturaipundi Taluk, Tanjore District.*

Copy Right Registered.

THE GRAMATHIKARI

கிராமாதிகாரி.

சென்னை இராஜதானியின் கிராமபரிபாலனம்
சீர்ப்படும்பொருட்டுப் பிரசுரிக்கப்படும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத் ௧] மணக்குடி—1901-௵ ஜனவரி ௴ [நெ. 2

நம் கிராமாதிகாரிப்பத்திரிகையின் நோக்கமும் கிராம உத்தியோகஸ்தர்களது ஊக்கமும்.

சென்னை இராஜதானியின் கிராமபரிபாலனஞ் சீராய் நடைபெறுவதற்காகவும், கிராமஉத்தியோகஸ்தர்களாகிய நமக்கு இன்னும் சம்பளமும் அதிகாரமும் உயர்த்தப்படவேண்டுமென்பதற்காகவும் "கிராமாதிகாரி" என்னும்பத்திரிகையை நடத்தத் துணிவுகொண்டு ஆங்காங்கு சென்று கிராம உத்தியோகஸ்தர்கள் பலரிடம் இதைப்பற்றித்தெரிவிக்க அவர்கள் ஒவ்வொருவரும் இவ்விதப்பத்திரிகை நமக்கு வேண்டியாவசியந்தானென்றும் தாங்கள் வருடச்சந்தா ரூ 3 யும் செலுத்திப் பத்திரிகையைப்பெற்றுக்கொள்வதாகவும் ஆர்டர்பாரத்தில் கையொப்பமிட்டார்கள். கோட்டுலவில் கண்டபடி போதுமான சந்தாதாரர்கள் சேர்ந்தவுடன் அதாவது 1900-௵ ஆகஸ்டு௴த்தில் பத்திரிகையை வெளியிட ஆரம்பித்தும் டிவிஷனாபீஸில அக்ஷரசாலையின் மானேஜர் டிக்களரேஷன் எழுதிவைக்கவும் போஸ்ட்மாஸ்டர் ஜெனரலவர்களிடமிருந்து ரிஜிஸ்தர் நம்பர் கிடைக்கவும் காப்பிரைட் ரிஜிஸ்தர் செய்யவும் நாள் சென்றதால், முதல சஞ்

சிகையை (நவம்பர்மீ"த்தில்) கையொப்பம் செய்த ஒவ்வொரு சந்தாதாரர்களுக்கும் வி. பி. யில் அனுப்ப நேரிட்டது. அவ்வித மனுப்பியதில் பல பத்திரிகைகள் திரும்பிவந்துவிட்டன, இதை நோக்குங்கால் உண்மையாய் இப்பத்திரிகையின் அபிமானிகளுக்கும் நமக்கும் எவ்விதம் மனக்கிலேசமுறுமென்பதை நண்பர்களே கவனியுங்கள் வி. பி யை மறுதளித்தகனவான்களைப்பற்றி நமக்குக்கிடைத்த நிருபங்களில் சிலவற்றை நண்பர்களின் பார்வைக்காக மற்றோர்பக்கத்தில் பதிப்பித்திருக்கிறோம்.

நிற்க; இரண்டாவது சஞ்சிகையானது முதல் சஞ்சிகையை வி. பி. யில் பெற்றகனவான்கட்கே அனுப்ப ஏற்பாடு செய்திருந்தாலும் அவர்கள் இவ்வளவு பெயரென டிசம்பர்மீ"தக்கடைசியில் தான் தெரியவந்ததால் இரண்டாவது சஞ்சிகையை ஜனவரியில் வெளியிடநேரிட்டது. நமது பத்திரிகையை வி. பி. யில் பெற்ற ஒவ்வொரு நண்பர்கட்கும் நாம் வாக்களித்தபடி (12) சஞ்சிகைகள் அனுப்பத்தயாராயிருக்கிறோ மென்பதை இதன்மூலமாய்த் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

தவிர ஏற்கனவே கையொப்பஞ்செய்து இது வரையில் சந்தாசெலுத்தாத கனவான்களுடைய அறிவிப்புக்காகவும் அநுஷ்டானத்திற்காகவும் இரண்டாவது சஞ்சிகையின் முதல்பாகம் 33 முதல் 48 வரையிலுள்ள பக்கங்களைத்துண்டாகப்பிரித்து அனுப்பியிருக்கிறோம் அவர்கள் உடனே ஒருவருஷச்சந்தாவை அனுப்பியாவது அல்லது வி. பி. மூலமாக மறுபடியும் பத்திரிகையை அனுப்பும்படி எங்களுக்குக் கடிதம் எழுதியாவதுபத்திரிகையைப் பெற்றுக்கொள்வார்களென்று நம்புகிறோம். அல்லாமலும் கையொப்பங்கள் எவ்வளவு ஜாஸ்திப்படுகிறதோ அதற்குத்தகுந்தபடிதான் பத்திரிகை நல்லஸ்திதிக்கு வந்து பயன்படுமாதலால் இதுவரையில் கையொப்பஞ்செய்திராத மற்றக் கிராம உத்தியோகஸ்தர்களும் உடனே இப்பத்திரிகைக்குக் கையொப்பஞ்செய்து வாங்கிவாசித்துப் பயனடைவதோடு பத்திரிகையையும் முன்னுக்குக்கொண்டுவரவேண்டுகிறோம்.

முக்கிய அறிவிப்பு.

உத்தமர்கள்சத்தியத்திற்குள்வ்வளவுபயப்படுகிருர்கள்பாருங்கள்

நம்கிராமாதிகாரிப் பத்திரிகையின் கையொப்பக்கனவான்களில் ஒருவரும் திருத்துரைப்பூண்டித்தாலூகா பாங்கல் வட்டம் கிராம முனிசிபுமான நண்பர் அவர்களின் கடிதத்தை வாசியுங்கள். கடிதம் வருமாறு:— I.

மணக்குடியில் கிராமாதிகாரிப் பத்திராதிபரவர்களுக்கு பாங்கல் வட்டம் கிராமமுனிசிபு மிக அன்புடன் எழுதிய விருபம். தாங்கள் வி. பி. யில் அனுப்பிய "கிராமாதிகாரி" பத்திரிகையைத் தபால் ஆபீஸ் உத்தியோகஸ்தர்கள் நான் கேட்டுக்கொண்டபடி இரண்டுவாரம் தன் ஆபீஸில் வைத்திராமல் தங்களிடம் வாப்ஸ் அனுப்பிவிட்டார்கள் இப்போது பத்திரிகையை வி. பி. யில் அனுப்பக்கோருகிறேன்.

(ஒப்பம்) முத்தய்யாபிள்ளை,
கிராமமுனிசிபு, —பாங்கல்.

மற்ருேர் கடிதம். II. 8—1—1901

ஐயர், சிறுமதுரை,

கிராமாதிகாரி வி. பி. மூலமாக வந்ததாகக் கேழ்விப்படுகிறேன் அந்தச் சமயம் நான் வெளியேபோயிருந்தமையால் என் அநுமதியன்றி தங்களுக்கு வாப்சாகிவிட்டதாகத் தெரிகிறது. அதைப்பற்றி நான் கவனிக்கிறேன். மேற்படி வி. பி. யை உடனே அனுப்பக்கோருகிறேன்.

K. சொக்கலிங்கம் பிள்ளை,
கரணம், சிறுமதுரை,
திருவெண்ணெய் நல்லூர் போஸ்டு.

இன்னும் இவ்விதமான பலகடிதங்களை இவ்விடத்தில் அச்சிட்டால்ஜாஸ்தியாக இடம் அடையும் என்று நினைத்து அவைகளையெல்லாம் அச்சிடவில்லை, மேற்கண்ட கனவான்களைப் போலவே வி பி. வாப்சு செய்த மற்றக்கையொப்பக் கனவான்களும் நமக்கு உடனே கடிதம் எழுதிப்பத்திரிகையை வி. பி. யில் ஒருவருஷச்சந்தாவைச் செலுத்திப்பெற்றுக்கொண்டு முதலில் கையொப்பம்செய்த தங்கள்கையெழுத்தை மெய்யெழுத்தாக்கிப் பத்திரிகையை வாசித்துபயனடைந்து உலகத்தாருக்குப் பேருபகாரியாய்ச் செல்வச்சிரஞ்சீவியாகவாழ்வார்களெனநம்புகிருேம்.

இங்ஙனம்,
S. கோதண்டபாணித் தஞ்சாயர்,
கிராமாதிகாரிப் பத்திராதிபர், மணக்குடி,
திருத்துரைப்பூண்டித் தாலூகா
தஞ்சாவூர் ஜில்லா.

ரெவினியூ அதிகாரம் பூண்ட மேலதிகாரிகளும் அவர்களது அதிகாரத்துக்குட்பட்டகிராம உத்தியோகஸ்தர்களும்.

சென்னை இராஜதானியின் கிராம உத்தியோகஸ்தர்களில் கிராம முனிசீபு, கரணம், மணியகார் என்ற மூவர்கள் முககிய ஸ்தர்கள். மற்றவர்களாகிய வெட்டி, தலையாரி, நீர்க்கட்டி முதலியவர்கள் மேலே சொன்ன உத்தியோகஸ்தர்களுககுட்பட்டுக் குற்றேவல் செயயும் ஊழியர்களாகச்சேவகம செய்பவர்கள்.

இவ்விதமாக ஒவ்வொரு கிராமத்திற்கும் கூடியமட்டில் கிராம உத்தியோகஸ்தர்களும கிராமபபோலீஸ் (தலையாரி) முதலிய சேவகர்களும நியமிக்கப்பட்டிருக்கிறாகள.

அப்படியிருந்தும் உத்தேசப்படி அநேக விஷயங்களில் சரியான விதமாய் வேணடிய அலுவல்கள் மாத்திரம் நிறைவேறிவரவில்லையென்று நிச்சயமாய்ச்சொல்லலாம்.

மாகஷிமைதங்கிய நமது கவர்ன்மெண்டார் அவர்களும், ரிவினியூ போர்டார் அவர்களும், கிராம உத்தியோகஸ்தர்களும் கிராமப்போலீஸ் (தலையாரிகள) முதலிய கிராமச்சேவகர்களும் எந்த அலுவல்களை நடத்தவேணடுமென்று உத்தேசிககப்பட்டிருக்கிறார்களோ அந்தவேலையை அவர்கள் முழுமையும் செய்து வரும்படி (செய்துவரவேண்டுமென்று) பலகடனவகளில் எல்லாக் கலெகடார்களுக்கும் ஆக்ஞாபித்திருககிறார்கள்.

அப்படி ஆக்ஞாபிக்கப்படும்பொழுதெல்லாம் கலெக்டர் துரையவர்களும தங்கள் ஜில்லா கெஜட்டுகளிலும் சர்ககியுலர்களிலும் எழுதிவிட்டு திருப்தியடைந்திருக்கிறார்களே தவிர மற்றப்படி உண்மையில் காரியம் நிறைவேறும்படி பார்த்துவந்தவர்களாகத்தெரியவில்லை.

தாலூகா அதிகாரிகள் இவ்விஷயங்களைக்கவனித்தால் எவ்வித குறைகளும் இல்லாது நடத்தத்தடையில்லை. தவிர அவர்கள் இவ்விஷயத்தில் கவலையெடுத்துக்கொள்ளும் பக்ஷத்தில் அதிலுள்ள குறைகளை அப்போதைக்கப்போது மேலாவுகத்தெரிவித்து இன்னும் கிராமபரிபாலனத்திற்கு வேணடிய சௌகரியமான விதிகளையும் ஏற்படுத்தும்படி செய்யலாம்.

எப்போதாவது தாலூகாஆபீஸ் கிராமக்கச்சேரி விஷயமாய் என்ன சீர்திருத்தம் செய்யலாமென்றுதாசில்தார்களைக்கவர்ன்மெண்டாரோ, போர்டாரோ அபிப்பிராயங்கேட்டால் அப்போது அநேகம் தாசில்தார்கள் கிராம உத்தியோகஸ்தர்களைத்தாங்களே ஜாஸ்தியாகச்சிக்ஷிக்கும்படியான பூரண அதிகாரங்கொடுத்தால் எல்லா சௌகரியமும் உண்டாகிவிடுமென்று சொல்லுகிறார்கள்.

இப்போதைய ஸ்திதியில் தாசில்தார்என்ற பெயரைச்சொன்னவுடனே கிராமஉத்தியோகஸ்தர்கள் யாவரும் சிம்மசொற்பனங்கண்ட யானைகளைப்போலப் பெருந்திகில் அடைகிறார்கள்.

கலெக்டர்கள், டிவிஷன் ஆபீஸர்கள் முதலியவர்களிடத்தில் கிராம உத்தியோகஸ்தர்கள் அவ்வளவு பயம் அடைவதில்லை.

கிராம உத்தியோகஸ்தர்கள், தாசில்தார், சப்மாஜிஸ்திரேட்டு முதலியவர்களிடத்தில் அவ்வளவு அளவிறந்து மிஞ்சிப் பயப்படுவதினால் யாதொரு நன்மையும் உண்டாவதில்லை. ஆனால் அதனால் உண்டாகும் தீமையோ அளவிடக்கூடாதவைகளாக இருக்கின்றன.

திருஷ்டாந்தமாக:—எந்தப்பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயருக்கு அளவுக்கு மிஞ்சிப்பிள்ளைகள் (மாணாக்கர்கள்) பயப்படுகிறார்களோ அப்பள்ளிக்கூடத்தின்பிள்ளைகள் நன்றாயபடிப்பில் தேறி புத்திசாலிகளாக முன்னுக்குவருவதில்லை திண்ணைப்பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களைக்கண்டாலும் அவர்கள் பெயரைச்சொன்னாலும் அப்பள்ளிக்கூடத்தின்பிள்ளைகள் எமனைக் (கொலைத்தொழிலையுடையவன்) கண்டஉயிர்கள் (பிராணிகள்) போல் பயப்படுகிறார்கள். அப்படியிருக்க அப்பள்ளிக்கூடங்களில் எவ்வளவுகாலம் படித்தும் பிள்ளைகளுக்கு விஷயஞானம் உண்டாவதில்லை. ஏனென்றால் அவர்களுக்கு வழக்கமாய் உபாத்தியாயரால் விதிக்கப்படுகிற கொடுந்தண்டனையின் (அளவுகடந்து அடித்தல், கோதண்டம், ஒற்றைக்காலில் நிற்கவைத்தல், அண்ணாந்தாளபோட்டு முதுகில் பாரங்கல் வைத்தல் இன்னும் இவைபோன்ற பலவும் துர்ப்பாஷையாகவைதலும்) பலனாக உண்டாயிருக்கும் பயத்தினால் அவர்களிடத்தில் விசுவாசம் இல்லாமல் போய்த் தங்களுக்குண்டாகும் சந்தேகங்களை உபாத்தியாயரிடம் கேட்கவும் அவர்கள் போதிப்பதைத்தாங்கள் நம்பிக்

கேட்டு மனதில்வைக்க ஏதுவில்லாத காரணத்தினால் நல்ல பயிற்சி இல்லாதும்போகின்றார்கள்.

தற்காலத்திலுள்ள இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களிலோ அப்படிக்கில்லாமல் ஒழுங்காயும் பிள்ளைகளைச் சாதாரணக்கண்டிப்புடன் கண்ணியமாயும் நடத்திவருவதால் வெகு சீக்கிரத்தில் விஷய ஞானங்கள் விர்த்தியாகி நல்ல ஸ்திதியை அடைகின்றார்கள்.

இப்படியே சாதாரணமாய் ஒருமேல் உத்தியோகஸ்தருக்கு அடுத்த கீழ் உத்தியோகஸ்தர்கள் எவ்வளவு தாழ்மையும், பயமும் உடைத்தாயிருக்கலாமோ அந்த எல்லைக்கு மேற்பட்டு தாசில்தார், சப்மாஜிஸ்திரேட்டு இவர்கள் தங்கள் சபார்டிநேட்டுகளாகிய கிராம உத்தியோகஸ்தர்களை அதிகத்தாழ்மையாயும், பயமுண்டாகும்படி கொடுமையாயும் நடத்திவருவதால் கிராம உத்தியோகஸ்தர்களுக்குத் தங்கள் உத்தியோகக்கடமைகளை நிறைவேற்றுவதில் வேண்டிய நல்ல ஞானம் விர்த்தியாகாது அவர்களிடத்தில் பெரும்பயமும், தாழ்மையான புத்தியும் உண்டாகிறது.

ஆகையால் இனி தாசில்தார்களும், சப்மாஜிஸ்திரேட்டுகளும் கிராம உத்தியோகஸ்தர்களை ஒவ்வொருசமயத்திலும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்திலும் அவர்களுடைய கவுரவத்திலும் தவறுதல்கண்டவிடத்துச் சீர்திருத்தியும் அதுநேரிடாவண்ணம் போதித்தும் பட்சமாய் நடத்தி உற்சாகப்படுத்துவார்களாக.

அதிகாரதோரணையிலாவது மற்றப்படியாவது ஒருபோதும் கிராம உத்தியோகஸ்தர்களை அவர்கள் அளவுக்குமிஞ்சிப் பயப்படும்படி அற்பக்குற்றங்களுக்கெல்லாம் சஸ்பெண்டு முதலியது செய்யும்படி தாசில்தார்கள் ஏற்பாடு செய்து கொடுமை செய்யாக்கூடாது.

தங்கள் கிராம உத்தியோகஸ்தர்களிடம் கண்ணியமாய் நடந்துகொள்ளவேண்டுமென்று சமயம் வாய்க்கும்போதெல்லாம் ஜனங்களுக்குச் சொல்லவேண்டும்.

இப்போது எப்படி கிராமஉத்தியோகஸ்தர்களுடைய ரிவினியூ வேலைகளை ஜாக்கிரதையாகக் கவனித்து வருகிறார்களோ அப்படியே அவர்கள் செய்யவேண்டிய சிவில் கிரிமினல் வேலைகளையும் செய்துவருகிறார்களாவென்று கண்காணித்து வருவ

தோடு அவர்கள் அவ்வலுவல்களைச் செய்யவேண்டிய வழிகளை யும் அவர்களுக்குத் தெரிவித்து அவர்கள் அவ்வேலைகளைச் செய்ய வல்லவர்களாக்கக்கூடியவிஷயத்தில் தாங்கள் அடிக்கடி கவனம் செலுத்திவரவும் வேண்டும்.

எந்தக் கிராம உத்தியோகஸ்தராவது அளவுக்கு மிஞ்சித் தங்களுக்குப் பயந்தாலும், பயப்படுவதாகக் காட்டினாலும், அதி கத் தாழ்மையாக நடந்துகொண்டாலும் அதில் தாங்கள் அதி ருப்தி அடைவதாகவும் அவர்கள் வேலைக்கு லாயக்கில்லாத கோழைத்தனமுடையவர்கள் என்றும் அவர்களை எச்சரித்துப் புத்திகற்பிக்க வேண்டும். ஏனென்றால் தாசில்தார் முதலிய அதிகாரிகளுக்கு அதிகத்தாழ்மையாய் நடந்தும் ஏழைமைபேசிக் கெஞ்சியும் அதனால் அவர்கள் தயவையடைந்து உத்தியோகத் தைக் காப்பாற்றிக்கொள்வது அநேக கிராம உத்தியோகஸ்தர் கள் சுபாவமாயிருக்கிறது.

அது மற்ற எல்லாக்கிராம உத்தியோகஸ்தர்களையும் கெட் டவழிக்கு உட்படுத்தும் மார்க்கமாயிருக்கிறது.

டிவிஷனாபீஸர்களும் தாசில்தார்களும் வருஷாந்தர ஜமா பந்திமுடிக்கும நிர்ப்பந்தத்தைஉத்தேசித்துக் கிராம உத்தியோக ஸ்தர்கள் செய்யவேண்டிய ரிவினியூ வேலைகளைமாத்திரம் கண் காணித்துவருகிறார்கள் சிவில் கிரிமினல் வேலைகளுக்குப் பேரு க்குமாத்திரம் பூச்சியக்கணக்கு வருஷாந்தரம் வாங்கி மேலாவு க்கு ரிபோர்ட்டு செய்து வருகிறார்கள். அது சரியல்ல.

தாசில்தார்களும் டிவிஷனாபீஸர்களும் கிராமங்களுக்குச் சவாரி போகும்போது கிராம உத்தியோகஸ்தர்களை சிவில் கிரி மினல் விசாரணைகள் நடந்து வருகிறதா? கோர்ட்டுச்செய்யும் இடம் எது? மேஜை எங்கே? நாற்காலி எங்கே? கக்ஷிக்காரா ர்கள் சாக்ஷிக்காரர்கள் வந்திருக்கும் இடம் எது? தொழுக்கட் டை எங்கே? காவல் படுத்தும் இடம் எது? சிவில் ரிஜிஸ்தர், கிரிமினல்கியாலண்டர்எங்கே? என்று விசாரித்துவருவதென்று ஏற்பட்டால் சிலநாளுக்குள் சரியானஸ்திதிக்கு வந்துவிடும்.

சில கிராம உத்தியோகஸ்தர்கள் பேருக்குமாத்திரம் ரிஜிஸ் தர்கள்வைத்து பூச்சியம் என்று எழுதி வைத்திருப்பார்கள். அது விஷயம் சரியல்லவென்றும் அவர்கள் நடத்திவரவேண்டி யமாதிரி இன்னவித மென்றும் சொல்லிக்காட்டவேண்டும்.

இப்போது கொஞ்சகாலமாய்க் கரணங்களுக்குச் சர்வே, செட்டில்மெண்டு விஷயமாக வருஷாந்தரம் சில நாள் சர்வேஸ்கூல் வைத்துப் பழக்கிவந்தார்களே அந்தப்படி சிலவருஷங்களுக்குக் கிராம மூனிசீபுகளுக்கும் தாலூகாதோறும் டிவிஷனில் ஸ்கூல் வைத்துப் போதித்துப் பரீக்ஷித்தும் வரவேணடும்.

(இன்னும் வரும்)

கிராம மூன்சீபுகளே! கரணங்களே!

நமது இங்கிலீஷ் இராஜாங்கத்தின்கண் உத்தியோகஞ்செய்யும் பெரிய உத்தியோகஸ்தரானவர்கள் தாசில்தார், சப்மாஜிஸ்திரேட்டு முதல் மாக்ஷிமைதங்கிய கவர்னர் ஜெனரல் துரையவர்கள்வரையிலுள்ள எல்லா உத்தியோகஸ்தர்களும தாங்கள் தங்களுடைய உத்தியோகத்திலிருந்து அடுத்த மேல் உத்தியோகத்தை அடைந்து அவ்வுத்தியோகத்தையும நன்றாய் நடத்தக்கூடிய அவ்வளவு கல்விஞானத்தையும் சட்டப்பயிர்ச்சியையும அநுபோக சாமர்த்தியத்தையும் அடைந்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் அவர்கள் தங்கள் அறிவையும் உலகஞானத்தையும விர்த்திசெய்து தங்கள் உத்தியோக காரியங்களைச்சரியாய் நடத்திவரவேணடியதற்காகச் சமாசாரப்பத்திரிகைகளை வாங்கி வாசித்துவருகிறார்கள். அப்படிப்பட்ட பெரிய உத்தியோகஸ்தர்களில் பத்திரிகைவாங்கி வாசிக்காத உத்தியோகஸ்தர்கள் கிடையாது என்று நிச்சயமாய்ச்சொல்லலாம். அப்படியிருக்கக் கிராம உத்தியோகஸ்தர்களாகிய உங்களில் அநேகருக்கு அவரவர்கள உத்தியோகத்தை நடத்துவதற்குப்போதுமான கல்வி அறிவும விஷய ஞானமும் இல்லை தவிர உங்களில் கெட்டிக்காரர்களாக அதாவது மிகவும் தெரிந்தவர்களென்று மதிக்கப்பட்டிருக்கும் பலருக்கும் பின்னும் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள அநேகம் இருக்கின்றன அப்படியிருக்க உங்களில் சிலர் தவிர அநேகர் தங்கள் கல்வி அறிவையும விஷயஞானத்தையும விருத்திசெய்துகொள்வதில் கவலையற்றிருப்பது எவ்வளவு அறியாமை. அதிலும் கிராமாதிகாரி என்ற ஒரு பத்திரிகையை கிராம உத்தியோகஸ்தர்களாகிய உங்கள் நன்மையை நாடியே நம்பத்திராதிபர் பிரசுரம்செய்யவேண்டிய முயற்சி செய்து உங்களில் அநேகரிடம் எழுத்துமூலமாய் ஆர்டர் வாங்கிக்கொண்டு அந்தப்படி முதல் சஞ்சிகையை அச்சிட்டு வி.பி. யில்

அனுப்ப அவைகளில் சிலவற்றைச்சிலர். பெற்றுக்கொண்டது போக பலதிருப்பிவந்துவிட்டதாகத் தெரியவருகிறது. இது எவ்வளவு துக்ககரமான காரியம். அதைப்பற்றி இச்சமயம் அதிகமாகச்சொல்லாமல் கர்ணங்களே !! முனிசீபுகளே !!! முதலில் கையொப்பமிட்டு முதல சஞ்சிகையைப்பெற்றுககொள்ளத் தவறிப்போனவர்கள் உடனே பத்திரிகையின் ஒருவருஷச்சந்தாத்தொகையை பத்திராதிபருக்குஅனுப்பி முதலில் வாககளித்துக் கையொப்பம்செய்தது பொய்யாகாமல் பத்திரிகையைப்பெற்றுக் கொள்ளுங்கள் ! இதுவரையில் கையொப்பமசெய்திராதவர்கள் உடனேஎழுதிப் பத்திரிகையை வி. பி. யில் பெற்றுக்கொள்ளுங்கள் ! நீங்கள் நல்ல ஸ்திதிக்கு வருவதற்கு இது நல்ல சமயம ! "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள" என்ற பெரியோர் வாக்கிற்கு ஒப்ப நடந்துகொள்ளுங்கள் ! இப்பத்திரிகை எவ்வளவு நல்ல ஸ்திதிக்குவருமோ அவ்வளவு நன்மை உங்களுக்குமுணடாகும். சொன்னேன் ! சொன்னேன் !! முக்காலும் சொன்னேன் !!!

இங்ஙனம்,

நன்மைநாடி.

கிராமாதிகாரிப் பத்திரிகாபிமானிகளுக்கோர் விண்ணப்பம்.

நண்பர்காள் !

"கிராமாதிகாரி" எனப் பெயர்பூண்ட இப்பத்திரிகையை நடத்திவரும் நமது நண்பர் மிஸ்டர் கோதண்டபாணி [illegible]யரவர்கள் தமது ஏராளமான பொருட்செலவையும் கஷ்ட நிஷ்டூரங்களையும் பாராது இப்பத்திரிகை "நாடெங்கும்வாழக்கேடொன்றுமில்லை" யெனத் தம்போன்ற கிராம அதிகாரிகளை மதித்து நடத்திவரும் கர்ணம், முனிசீபு, பட்டாமணியம் முதலிய கிராம உத்தியோகஸ்தர்கள் தங்கள் அதிகாரங்களை ஒழுங்காயும் சொல்லை நாகரீகத்துடனும் நடத்தித் தமக்கு வேண்டிய சாதகங்களையும் இப் பத்திரிகை மூலமாகவே மேலான அதிகாரிகளுக்கு நியாயத்துடன் தெரிவித்து அதற்கு வேண்டிய பரிகாரங்களையும்பெற்று மேன்மையடையவேண்டுமென்ற எண்ணம் ஒன்றைமாத்திரமே மேற்கொண்டவராய்த் தமது வாணாள் வீணாகாது நீள நினைந்து முயற்சிசெய்துச் சென்ற ஆகஸ்டு மாதத்தில் ஒரு பத்திரிகை வெளியிட்டு அதை V. P. போஸ்டில் சொற்பச்சந்தாவாகிய ரூ. 3 செலுத்திப்பெற்றுக்கொள்ளும்படி ஏற்கனவே

பல நோட்டீசுகள் மூலமாய்க் கேட்டுக்கொண்டிருந்தபடி சம்மதித்து முன்னமே கையெழுத்துச்செய்திருந்த நமது நேயர்கள் தவறாமல் பெற்றுக்கொள்ளுவார்களென்ற முழு நம்பிக்கையுடன் அனுப்பினோங்கள். அங்ஙனமனுப்பிய பத்திரிகைகளைப் பலர் சூரியனைக்கண்ட தாமரை மலரென முகமகிழ்ந்து கையேந்தி ஏற்படுத்திய அற்பச் சந்தாவையும் முற்படச் செலுத்திப் பெற்றுக்கொண்டு அதனாலாய பயனைத் தாங்கள் உள்ளங்கை நெல்லிக்கனியாகக் கண்டுகொண்டு ஆனந்தித்துத் தம்போன்ற பிறரையும் இங்ஙனமனுபவிக்கத் துணிவுபடுத்தி நமது அபிமானிகளையும் பொருட்படுத்திய கனவான்களின் உற்சாகத்தைக் கண்டு தமியேன் மனமிகுண்டான சந்தோஷத்திற் களிக்கின்றது.

அங்ஙனமாகச் சிலர் இப்பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளாது தாம் முந்திக் கையொப்பஞ் செய்திருந்ததையும் மறந்தவராய் நமது பத்திராதிபருக்குத் தபாற்செலவு முதலிய கஷ்டத்தையுமுண்டுபண்ணி மறுதளித்துத் தமது மேலான குணத்தையுங் குறைத்துக் கொண்டதை யோசிக்க நமக்கு ஆறாத் துயரத்தைத் தருகின்றது. இங்ஙனம் இப்பத்திரிகை மறுத்தது:—

இப்பத்திரிகை இன்ன பயன் தருமென்றறியாமையாலோ? அல்லது சொற்பச் சந்தாவைச் செலுத்தலோபி அடுத்த வட்டம் சர்வ முன்சிபுகளுக்கு வருவதை ஒரு தரம் வாங்கிப் பார்த்துவிட்டால் போதுமென்றோ? அல்லது சிலர் "எண்ணித் துணிக கருமம் துணிந்தபி னெண்ணுவமென்ப திழுக்கு" என்னும் ஆன்றோர் வாக்குக்கு இலக்காய்ப் பத்திரிகையை ஆரம்பித்து இடையில் கைநழுவவிட்டு நின்றுபோன பல பத்திரிகைகளைப் போல இதுவும் இடையில் நின்றுவிடுமோவென்னும் சந்தேகத்தாலோ? மாதமொன்றுக்குச் சந்தாவாக ஏற்பட்ட அணா நான்காகிய இவ்வற்பச் சந்தாவைக் "கற்பகோடிகால முதவக்கூடியதை விட்டுவிடுகிறதா" வென்ற லோபத் தன்மையினாலோ? இன்னும் பலவேறென்ன காரணந் தானோ நாமறியக்கூடியதாயில்லை. ஒருசமயம் இப்பத்திரிகை வெளியிட்டவுடனே அதன் பயனும் வெளியிடப்படாமையால் இஃதோர் ஜீவனோபாயத்திற்காக ஏற்படுத்திப் பணம் சம்பாதிக்கத்தான் இவ்வுபாயம் செய்திருப்பதாகவும் நினைக்கக்கூடும். அவ்வித எண்ணமுள்ள கனவான்களும் மற்றவர்களும் அடியிற்கண்ட திருஷ்டாந்தத்தைக் கண்டு அடங்குவார்களாக. ஒரு கனவான் தான் தம்முடைய ஓய்வு காலத்தில் யாழினுமினிய மழலைச்சொல்லைக்கேட்டு மனங்களிக்கவும், ஆல் தனது விழுதால் பலனடைவதுபோலத் தமது தளர்ச்சிகாலத்தில் பலவித உதவியைப்பெற்றுச் சுகமடையவுமாக இன்னும் இவைபோன்ற பற்பல பலப் பிராப்தியை முன்னிட்டு அநேக தவ விரதாதிகளாலாய தேக கஷ்டத்தையும் ஏராளமான தான தர்மாதிகளாலாய பொருள் கஷ்டத்தையும் பாராது செலவிட்டுக் கடைசியில் ஓர் சற்புத்திரனை அடைந்தவிட்டால் அப்பொழுதே மேற்கண்ட பலன்களை அடைவதில்லை. அச்சிறுவனைப் பாராட்டிச் சீராட்டித் தாலாட்டி வளர்த்துத் தக்க பிராயம் வந்தபின்னன்றோ மேற்சொன்ன பலன்களைப் பின்னமறப் பின்னரடைவான். ஆகை

யால் நமது நண்பர்களெல்லாரும் இப்பத்திரிகையினாலாய பயன் அப்பொழுதே கிடைத்துவிடாதென்பதை மனதில் பதித்து இப்பத்திரிகை மூலமாய்ப் பிறந்த குழந்தையைச் சிறந்த நிலையில் வைத்துச் சீராட்டிப் பாராட்டி விருத்திக்குக்கொண்டுவரும் வகைதெரிந்து பலரையும் வேண்டித் தூண்டிப் பெற்றதாய்க்கும் உற்றதுணையாய் உற்சாகமாய் நடத்திவருவதை விட்டுப், பத்திராதிபருக்கு கஷ்டத்தையுண்டு பண்ணுகிறதென்றால் இதைவிட வேறென்னவேண்டும்?

எற்கனவே பத்திரிகையை V.P யில் அனுப்புவதைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று பல கையொப்ப நேயர்களுக்கும் நோட்டீசு முன்னுடியே அனுப்பியிருந்ததைக்கௌரவமாகப்பெற்றுக்கொண்டுமௌனமாயிருந்துவிட்டமையால் அவர்கள் ஒப்புக்கொண்டதாகவே நினைத்துப்பின்னும் தபாற்செலவுசெய்து பத்திரிகையனுப்ப நேரிட்டதை வாங்காது மறுத்துவிட்டது கௌரவமாகுமா? நோட்டீசு பெற்றுக்கொண்டவுடனேயே வேண்டும் வேண்டாமென்று எழுதியிருந்தாலும் இவ்வித கஷ்டமுண்டாகக்காரணமில்லை. இவ்வித கஷ்டமுண்டுபண்ணிய கனவான்களுக்கு நற்புத்திகூறவேண்டியது அவசியமாயிருந்தபடியால் இப்பத்திரிகை மறுமுறை வெளியாகத்தாமதித்ததாக வருந்துகிறோம்.

“பக்கத்து மக்கள் சொர்க்கத்துக்குநிவா” னதுபோல நமக்கென்றே ஒன்றிருந்தாலன்றோ சிறுகச்சிறுகப் பயனடைச்சிறக்கப்பெறலாம். ஆகையால் இவ்வித நோக்கங்கொண்டே வேறுபல பத்திரிகைகளிருப்பினும் தமக்கென்றே ஓர்பத்திரிகையொன்றிருக்கவேண்டுமென்னும் தம்போன்ற கிராமாதிகாரிகளுக்கு வேண்டிய நன்மைகளுக்காக பிறர்கையை நோக்குவதழகல்லவே என்பதாய்த் தம்மால் ரூ.1000 த்துக்குமேல் செலவுசெய்து பத்திரிகையை வெளிப்படுத்தியவர் இடையில் கைசோரவிடாரென்பதற்கு அநேக சாக்ஷியங்களிருப்பினும் அவைகளையெல்லாமிங்கெழுத விரிவஞ்சிவிடுத்தாம். அங்ஙனம் விரித்தெழுதினும் நம்புமவர்களேயன்றி நம்பாதவர்களுக்கென் போதித்தும் பயனில்லையன்றோ! தானாய்க்கனியாததைத்தடிகொண்டடித்தால் கனியுமா? இம்முயற்சி தமக்குத்தானே யிருக்கவேண்டியது. அங்ஙனமில்லாவிட்டாலும், பிறர்முயற்சியெடுத்தாலதற்காவது ஒத்தாசையாக விருத்தி முடிக்காமல் அதற்கு விரோதிகளாயிருப்பவர்களின் புத்தியிருந்தபடி யென்னே? இக்காலத்தில் கனியிருப்பக்காய்கவர்தல் போல் வீண்படாடோபத்திலேயே விருப்பமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆயினும் அத்தன்மையரல்லாத நமது நேயர்கள் இப்பத்திரிகையின் நன்மைதீமைகளையறிந்து கனவானுகருத்தாயிருந்து மென்மேலும் விருத்தியாக வேண்டிய விஷயத்தில் தம்மாலான உதவிகளைச்செய்து மேன்மேலும் கீர்த்தியுடன் வாழக்கடவார்களாக. சுபம்.

இங்ஙனம்,

ஓர் விண்ணப்பதாரன்.

கிராமாதிகாரிப் பத்திரிகையைப்பற்றிய கடிதங்கள்.

I

கிராமமுனிசிபுகளோ ஒரு கோர்ட்டுக்கு ஜட்ஜியாகவும் கிராமமாஜிஸ்திரேட்டாகவும் இருப்பதோடு அவர்களில் அனேகர் பிரபுக்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் கேவலம் ஒருவருடசந்தா ரூ 3 விஷயத்தில் மோசம் செய்வார்களா, செய்யமாட்டார்கள். உடனே பத்திராதிபருக்கு மணியார்டர் செய்து பத்திரிகையைப் பெற்றுக்கொள்வார்களென நம்புகிறேன். கரணங்களும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அனேகமாய் எல்லாரும் கற்றறிந்தவர்கள். கவுரவத்தைக்காப்பவர்கள் கிராமத்தாராலும் மற்றவர்களாலும் மதிக்கப்பெற்றவர்கள். பலவிதமான பழக்கவழக்கங்களைத் தெரிந்த அநுபோகஸ்தர்கள். பலர் தனவான்களாயும் உயர்ந்த புத்திசாலிகளாயுமிருக்கிறார்கள் ஆகையால் கேவலம் ஒருவருடசந்தா ரூ 3-யும் உடனே இப்பத்திரிகையினதிபருக்கனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்வார்களென நினைக்கிறேன்.

இங்ஙனம்,

ஓர் அபிமானி.

II.

சென்னை இராஜதானியின் கிராமபரிபாலனை ஏற்பட்டானது சீர்குலைந்து பாழ்அடைந்து இருப்பதைப்பார்த்துப் பலவிதத்திலும் மனம் தளராமல் அக்குறைவை நிவர்த்திசெய்துகொள்வதற்கென்று "கிராமாதிகாரி" என்னும் ஓர் மாதாந்த பத்திரிகையை பிரசுரிப்பதற்கு வேண்டியவிவரங்களடங்கிய விளம்பரங்களை ஐம்பதினாயிரம் வரையில் அச்சிட்டு ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஏஜண்டுகளை அனுப்பியும், நேரிலும் தபால் மூலமாயும் பிரசுரப்படுத்தியும் பிறகு அவர்கள் மறுக்காவண்ணம் கிராமாதிகாரி விண்ணப்பதார்களில் ஒவ்வொருவரும தாமேநேரில் பூர்த்திசெய்து கையொப்பம்செய்ததில்போதுமானவளவு கையொப்பம் சேர்ந்தவுடனே பத்திரிகை பிரசுரம்செய்து ஒவ்வொருவர்களுக்கும் V. P. யில் அனுப்ப பலர் தங்கள் கடமையைமறந்து பணம் செலுத்தாமல் திருப்பிவிட்டார்கள அப்படி அவர்கள் செய்தது முழுவதும் அநியாயம். அவ்விதம் திருப்பி அனுப்பியது அவர்களுடைய மேலான கவுரவத்திற்கும, நியாயத்திற்கும் ஒவ்வாது. திருப்பி அனுப்புவதானது மோசம் செய்வது மாத்திரமல்ல தங்களுக்கே அல்லாது தங்களினத்தாராகிய கரணம் முனிசிபுகளுக்கும் பெரும் அவமதிப்பை உண்டாக்கினவர்கள் ஆவார்கள்; எப்படியென்றால், கரணம் முனிசிபு என்ற உத்தியோகஸ்தர்களில் அநேகர் மோசக்காரர்கள் என்று ஏற்படுவதோடு இனி கிராம உத்தியோகஸ்தர்களின் சவுகரியத்தை உத்தேசித்து வேலைசெய்ய ஆரம்பிக்க ஒருவருக்கும் தைரியம் வராது. ஆகையால் தனவான்களான கரணம் முனிசிபுகளே உடனே

தயவுசெய்து கிராமாதிகாரிப்பத்திரிகையின் வருடசந்தா ரூ. 3-யும் தாங்கள் ஏற்கனவே ஒப்புக்கொண்டு கையெழுத்துச் செய்தபடி பத்திராதிபருக்கு மணியாடர்செய்து பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளுங்கள். இப்பத்திரிகையினால் உங்களுக்கு அளவிடக்கூடாத நன்மைகள் விளையுமென்பது திண்ணம். திண்ணம். திண்ணம்.

M. S. K. R. A.
ஓர் கிராம உத்தியோகஸ்தன்.

III.

நமது பத்திராதிபர் கையொப்பக்காரர்களை நம்பியே அவர்கள் கையெழுத்தை மெய்யெழுத்தாக உறுதிகொண்டு பத்திரிகையை அவர்களுடைய நன்மைக்காகவே வெளிப்படுத்துகிறார். நம்பிக்கைசெய்து மோசம் செய்வது நம்பிக்கைமோசம் அன்றோ? இப்படிப்பட்ட மோசத்திற்கு சாஸ்திரங்களில் பிராயச்சித்தம் சொல்லப்படவில்லையாம். ஆகையால் அவரவர்களுக்கு நல்லறிவையுண்டாக்கிச் சந்தாவைச் செலுத்திப் பத்திரிகையைப் பெறும்படிசெய்து அவர்களைப் பாவத்தினின்று விலக்கவேண்டுமாய் ஜெகதீசனை சதா பிரார்த்திக்கின்ற

ஓர் சந்தாதாரர்.

IV.

ஒருவர் வாய்மொழியை நம்பியே உலகத்தார் அநேக காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. அப்படியிருக்க நமது பத்திராதிபர் எழுத்துமூலமாய் ஒவ்வொரு கையொப்பக்காரர்களிடமும் அநுமதிபெற்று இருக்கிறார். அப்படி எழுதிக்கொடுத்தவர்கள் தங்களை மறந்துவிடுவதென்றால் இதைவிட என்ன மோசமிருக்கிறது. அது தவிர நமது பத்திரிகைக்குக் கையொப்பஞ்செய்து கொடுத்தவர்கள் கேவலம் பெண்களல்ல பேடிகளுமல்ல. சித்தசுவாதீனமற்ற பயித்தியக்காரர்களுமல்ல அன்றாடம் கூலிக்கு வேலைசெய்யும் கிரகஸ்தாசெஸ்திகள் கைநாட்டுச்செய்பவர்கள் (நேல போடுந்தவர்கள்) அல்ல, எல்லோரும் மாட்சிமையும் கருணையும் பொருந்திய இங்கிலீஷ் கவர்ன்மெண்டின் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அதிலும் ஆபீசர்கள். அவர்களென்றாலோ கணக்கு முடிக்கும் கிராமக்கணக்கனும் கேஸியைத்தீர்மானம் செய்யும் கிராமமுனிசிபு என்னும் ஜட்ஜிகளும் "பெருமையும் சிறுமையும் தான்தர வருமே" என்றபடி அவரவர்கள் பெருமையை அவரவர்களே காப்பாற்றிக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறோம். காகிதப்போனமானம் கோடிகொடுத்தாலும் வாராது. அதாவது கேவலம் ரூ. 3 ரூபாயாகிய சொற்பத்தொகைக்கு மேற்படி பத்திரிகையின் அதிபரைமோசஞ்செய்தல் விளையும் குறைவு பெரிதாகும்.

இங்ஙனம்,
ஓர் கிருபன்.

கிராமாதிகாரி.

1. கிராமாதிகாரி என்னும் மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகையானது 1900-ஞ ஆகஸ்டு மாதம் முதல் தஞ்சாவூர் ஜில்லா திருத்தருப்பூண்டி தாலுகா மணக்குடி கிராமத்திலிருந்து வெளியாகிறது.

2. இப்பத்திரிகையின் நோக்கமானது, சென்னை இராஜதானியின் கிராமபரிபாலன ஏற்பாட்டை நல்ல நிலைமைக்குக்கொண்டுவந்து அதினால் எல்லா ஜனங்களுக்கும் க்ஷேமத்தை உண்டாக்கவேண்டுமென்பதே.

3. தங்கள் சபார்டினேட்டுகளாகிய கிராம உத்தியோகஸ்தர்களின் நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு கிராமபரிபாலனம் திருத்தமாய் நடத்தப்படுவதற்கு முக்கியசாதனமாயிருப்பதால் இப்பத்திரிகை விர்த்திக்கு வருவதில் தாசில்தார், சப்மாஜிஸ்திரேட்டு முதலிய உத்தியோகஸ்தர்கள் அதிக சந்தோஷப்படுகிறார்கள்.

4. இப்பத்திரிகை விர்த்திக்கு வருவதற்கு கையொப்பம் சேருவதே முக்கிய காரணமாயிருப்பதால் ஒவ்வொரு கர்ணங்களும் கிராமமுன்சீபுகளும் நமக்குஎழுதிப்பத்திரிகையைப்பெற்றுக்கொள்வதுடன் அக்கம்பக்கத்திய கிராமஉத்தியோகஸ்தர்களையும் இப்பத்திரிகைக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளச்செய்யவேண்டும்

5. இப்பத்திரிகையின் முதல் சஞ்சிகையை வி. பி. மூலமாக அனுப்பி ஒருவருஷ சந்தாவை முன்னுடியாய் வசூல்செய்துகொள்ளப்படும்.

6. அப்படி ஒருவருஷச்சந்தாவைச்செலுத்திய கையொப்பக்காரர்களுக்கு 12 சஞ்சிகைகள் உல்லாசமாய் அனுப்பப்படும்.

7. முக்கியமாய்க்கிராம உத்தியோகஸ்தர்களுக்காகத்தனியாக இப்பத்திரிகை ஏற்படுத்தப்பட்டிருப்பதால் இப்பத்திரிகைக்கு எல்லா கர்ணம் முன்சீபுகளும் அதிசீக்கிரத்தில் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகவேண்டும்.

8. இப்பத்திரிகையானது பெரியபுஸ்தகரூபமாய் நல்ல காகிதத்தில் பிழையின்றி நாணயமான அட்டையிடப்பட்டு ஸ்திரமாய் வைத்துக்கொள்ளும்படி ஏற்படுத்தி நடத்தப்படுகிறது.

9. இப்பத்திரிகையானது மாக்ஷிமைதங்கிய நம்சென்னைக்கவர்ன்மெண்டார்அவர்களுக்கு அனுப்பப்படுவதோடு ஹைகோர்ட்டார், ரிவினியூ போர்டார், ஜில்லா கலெக்டர்கள், டிவிஷன் ஆபீசர்கள், தாசில்தார், சப்மாஜிஸ்திரேட்டுகளுக்கும் அனுப்பப்படுகிறது.

இப்பத்திரிகை செய்யும்வேலை.

1. கிராமாதிகாரிகளுக்குக்கௌரவமும், அதிகாரமும் வேண்டியமட்டில் உயர்த்தி, சட்டம்ஏற்படுத்தவேண்டுமென்றும் சிறிதுசம்பளம் உயர்த்தவேண்டுமென்றும் முகாந்திரத்தோடு கவர்ன்மெண்டாரைக்கேட்டுக்கொள்வது.

2. தாசில்தார், சப்மாஜிஸ்திரேட்டு இவர்கள் கிராமஉத்தியோகஸ்தர்களை ஒழுங்கீனமாயும், மரியாதையீனமாயும் எப்போதாவது நடத்தினால் அதைப்பற்றி டிவிஷன் ஆபீசர், கலெக்ட்டர் ரெவினியூபோர்டார் முதலியவர்களுடைய கோட்டீசிற்குக்கொண்டுவந்து பரிகாரம் தேடுவது.

3. கிராமஉத்தியோகஸ்தர்களுக்கு அவர்களுடைய அதிகாரங்களையும் அவைகளை நடத்தும் வழிகளையும் எடுத்துப்போதிப்பது. இதுவரையில் ஏற்பட்டதும் இனி ஏற்படுவதுமான சட்டதிட்டங்கள், கவர்ன்மெண்டு ஆர்டர்கள், ரிவினியூபோர்டு புரோசிடிங்ஸ்கள், ஐகோர்ட்டு தீர்மானங்கள் இவைகளை வெளியிடுவதே, ஒவ்வொரு தமிழ் ஜில்லா கலெக்ட்டர்களுடைய உத்திரவுகளும் பிரசுரஞ்செய்யப்படும்.

4. கிராமமுன்சிப்கோர்ட்டினுடைய உபயோகத்திற்காக நம்பர்களுக்கு நல்லமாதிரியாக பூர்த்தியாய் ஜட்ஜிமெண்டு தீர்ப்பு, பிராது, சாக்ஷிவாக்குமூலம் இவைகளை அச்சிட்டு மாதிரிக்காக அனுப்புவது.

5. கர்ணம், முன்சிப்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஸ்பெஷல்டெஸ்டு பரிக்ஷைக்கேள்விகளும் அதற்கு ஜவாப்புகளும், வில்லேஜ் மானுயல், தீர்வைஜாகாமானுயல் சம்மந்தமானகேள்விகளும் ஜவாப்புகளும், சர்வேபரிக்ஷைகேள்விகளும், ஜவாப்புகளும் பிரசுரிப்பது. இது எல்லாகர்ணம் முன்சீப்புகளுக்கும் பரீக்ஷைக்குப்போகிற மாணுக்கர்களுக்கும் மிகவும் உபயோகமுள்ளது.

6. முக்கியமான சமாசாரங்களையும், இராஜாங்கம், வர்த்தகம், விவசாயம், கல்வி, பிள்ளைகளை முன்னுக்குக்கொண்டுவரும்வழி பூகோளசாஸ்திரம், அதிமேதாவிகளுடைய சரித்திரம், நீதிக்கதை, விஷயங்களும், மற்றும் அவசியமானவைகளும் வெளியிடப்படும்.

7. முன்பணம் இன்றிச்சந்தாதாரர்களுக்குப்பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

விசேஷக்குறிப்பு.

ஜாஸ்தியான கையொப்பக்காரர்கள்சேர்ந்தபிறகு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய் சம்பளத்தில் பேபர் ரிபோர்ட்டர் என்னும் உத்தியோகஸ்தர் நியமிக்கப்படுவர். அவர் ஒவ்வொரு ஜில்லாவிலும் தாசில்தார், சப்மாஜிஸ்திரேட், டிப்டி தாசில்தார் அவர்களுடைய (ஹெட்குவார்ட்டர்) கச்சேரிக்குச்சென்று அங்குள்ள கிராமஉத்தியோகஸ்தர்களையும் சந்தித்து அவ்வவ்விடங்களில் ஏற்படும் குறைமுறைகளை இப்பத்திரிகையில் பிரசுரம் செய்வதற்காக பத்திராதிபருக்கு ரிபோர்ட்டுசெய்வார். அவ்வுத்தியோகத்திற்கு பி. ஏ. அவ்வளவுதிறமைசாலியான மேதாவிகள் வேண்டிய அளவு நியமிக்கப்படுவர். இப்பத்திரிகை காப்பி ரயிட்டென்னும் சட்டப்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டு நடத்தப்படுகிறது.

வருஷச்சந்தா விபரம்.

சென்னை இராஜதானிகிராமஉத்தியோகஸ்தர்களுக்கு	ரூ. 3—0—0
மற்றவர்களுக்கு	,, 4—0—0
போஷகர்களுக்கு	,, 10—0—0

மணியார்டர்களும், லெட்டர்களும் பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும். பதிலறியவிரும்புவோர் ரிப்ளைகார்டாவது அரையணாலேபிலாவது அனுப்பவேண்டும்.

N.B.—இவ்வித நன்மையை அடைவதில் தாமதிப்பது கிராமஉத்தியோகஸ்தர்களுக்கு அழகாகாது.

மாக்ஷிமைதங்கிய மஹாராணியவர்கள் மரணம்.

அன்பு, ஆதரவு, இரக்கம், ஈவு, உதாரம், ஊக்கம் என்னும் சற்குணங்களையுடையவும், பிச்சைக்காரர் முதல் பிரபுக்கள் வரையிலுள்ள சகல ஜனங்களாலும் தெய்வத்திற்குச்சமானமாககொண்டாடப்பட்டு இப்பிரபஞ்ச விஸ்தீரணத்தில் 5-ல் 1 பங்கும், ஜனத்தொகையில் 3-ல் 1 பாகமாகிய சுமார் 40-கோடி ஜனங்களுக்கும் ஏகசக்கிரவர்த்தினியாய் விளங்கிவந்த நம்முடைய அன்னையாகிய விக்டோரியா மகாராணியவர்கள் சில காலம் தேக அசௌக்கியமாயிருந்து நாளது ஜனவரி௴ 22௳ மாலை 6½ மணிக்குத்தேகவியோகமானார்கள். இவர்கள் 1819-௵த்தில் பிறந்து 1837-௵மாகிய 18-வது வயதில் பட்டத்துக்குவந்து 1858-௵த்தில் இந்தியாவைத்தம்மாளுகைக்குட்படுத்திக்கொண்டு 1877-௵ "இந்தியாச்சக்கிரவர்த்தினி" யாராகப்பட்டஞ் சூட்டப்பெற்று அவர் பிரஜைகளையெல்லாம் 64-வருஷம் அன்னைபோலாதரித்துக்காப்பாற்றி அவருடைய 82-வது வயதில் இவ்வுலகைத்துறந்து விண்ணுலகையடைந்தனர். இம்மாது சிரோன்மணி அவர்கள் அவருடைய கணவர்பேரில் வைத்து வந்த பக்தி விசுவாசத்தால் பதிவிரதா சிரோன்மணியென்று புகழ்பெற்றனர். சற்குணசம்பன்னரான பிரின்ஸ் ஆல்பர்ட் அவர்களை 1840-௵ பிப்ரவரி௴ மணம்புரிந்து அவர்கள் இறந்த 1861-௵ டிஸம்பர்௴ 14௳ ஆ 21 வருஷங்களில் ஒரு நிமிஷமேனும் அவருக்கு மனவருத்தமுண்டாகாமலிருக்கும்படி அவ்வளவுபக்குவமாக இல்லறநடாத்தி அவரை உண்மையாய்நேசித்து அவரிடத்தில்உள்ளன்புவைத்து நடந்து கொண்டதன்றி அவரை இழக்கும்படியான துர்ப்பாக்கியம்பெற்ற பிறகும் அவருடைய ஞாபகத்தை மறவாமல் அவருடைய உருவத்தை அகத்தும் புறத்தும் வைத்துதியானித்து வந்தார்கள். இம்மாது ஸ்ரீ 5-பெண் 4-ஆண் ஆ 9-குழந்தைகளுக்குத்தாயாகினார்கள். 21—11—1840-ல் விக்டோரியா அடலேர்ட் மேரிலூசியாவையும்; 3—11—1841-ல் பிரின்ஸ் ஆப் வேல்ஸையும்; 15—4—1843-ல வி[illegible]மே[illegible] பேரியையும்; 6—8—1844-ல் பிரின்ஸ் ஆல்பர்ட் எர்னஸ்ட[illegible]ல்பர்ட்டையும்; 26—5—1847-ல எலினு ஆகஸ்ட விக்டோரி[illegible]வையும்; 14—3—1848-ல் லூஸியா, கரோலைன் ஆல்பர்ட்டாவையும்; 1—5—1850-ல் ஆர்தர் வில்லியம் ஆல்பர்ட் டியூக் ஆப்கனட்

டையும்; 7—4—1853-ல் லியோபோல்ட் ஜியார்ஜ்டன் கன் டியூக் ஆப் ஆல்ப்னியையும்; 14—4—1859-ல் பியாட்டிரிஸ், மேரிவிக்டோரியா பியாட்டிரேயும் பெற்றார்கள் இப்போது இவர்களில் 6 பேர்கள் தானிருக்கிறார்கள் இவருடைய மூத்த குமாரத்திதான் ருஷியாச்சக்கிரவர்த்தினியாக யிருக்கிறார். பிரின்ஸ் ஆப்வேல்ஸ் ஆகிய மூத்தபிள்ளை டென்மார்க்கு தேசத்தரசன் மகளை மணம் புரிந்தார். நமது விக்டோரியாபெருமாட்டியின் முழுப்பெயர் "விக்டோரியா அலெக்ஸாண்டரினா" என வழங்கப்பட்டுவந்தது.

மகிமையும் கௌரவமும் தங்கிய மகாராணியவர்கள் ஞாபகம் இந்தியர்களுக்கு என்றென்றைக்கும் மறவாதிருக்க அம்மாது சிரோன்மணி 1858-ஸு இந்தியாவைக்கைப்பற்றிய பொழுது வெளியிட்டவார்த்தைகளே போதுமானவையாகும். மஹாராணியவர்கள் ஈஸ்வரபக்தியினால் வரும் லாபத்தை அநுபவத்திலுணர்ந்தவராதலால் இந்தியர்கள் மதவிஷயத்தில் தாம் பிரவேசிப்பதில்லையென்று உறுதியளித்ததன்றி இந்தியாவை ஆளுவதில்இத்தேசத்துப்பிரஜைகளின் திருப்தியே தமக்குப்பெரிய வெகுமானமென்றும் தெரிவித்தபடி நடத்தியும் வந்தார்.

மஹாராணியவர்களுடைய உண்மையும் அன்பும் ஆதரவும் தெய்வபக்தியும் பதிவிரதா விசேஷமும்உலகத்தில்எல்லோராலும் கொண்டாடப்பட்டதென்பதற்கு உதாரணமாக ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் ஸ்ரீங்கேரியில் 1897-ஸு மஹாராணியவர்களின் அரசாக்ஷியின் சஷ்டி பூர்த்தியுற்சவ கொண்டாட்ட தினத்தில் நமது சக்கரவர்த்தினியார் ஸர்வேஸ்வரனது அவதாரமாயிருந்தாலன்றி இத்தனை நற்குணங்கள் ஒன்றுசேர்ந்து அவர்பால்வதியப்பெறா என்று பகிரங்கமாய்ப் பிரசங்கம் செய்து பேசினார்கள்.

மகாராணி இறந்ததை நினைக்க நினைக்க மனம் அனலிலிட்டமெழுகுபோல் உருகிவாடுகின்றது. எங்கும் மஹாராணியவர்கள் இறந்ததை நினைத்து துக்கிக்காதவர்கள் கிடையாதென்று உறுதியாய்ச் சொல்லலாம "இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென்றெண்ணவோ இடமில்லையே" என்றும் "இருப்பது பொய் போவதுமெய்" என்றும் சொல்லப்பட்டிருக்கும் அரிய பெரிய வாக்கியங்கள் நீதி தவறாது செங்கோல்செலுத்திய மஹாச்சக்கிரவர்த்தினி விஷயத்திலும் பொய்யாக வில்லையே?

"ஆண்டாண்டு தோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் வருவரோ" என்பதுபோல் நாம் எவ்விதமாய்த் துயரப்பட்டாலும் நமது அருமை மகாராணியவர்கள் நமக்குத்திரும்பக்கிடைக்கப்போகிறதில்லை, நேர்ந்தது நேர்ந்துவிட்டது? இனி என் செய்வோம். ஏதுசெய்வோம ஜெகதீசா !!

கிஸ்தி வசூல்.

இப்போது சர்க்கார் ரிவினியூ நிலத்தீர்வை வசூல் க்ரமமானதால் அதைப்பற்றி இங்கே கொஞ்சம் விபரமாய் எழுதுகிறோம் :—

1. கிஸ்தி வசூல் விஷயத்தில் மேலதிகாரிகளான தாசில்தார், டிப்டி தாசில்தார், ரிவினியூ இன்ஸ்பெக்டர் முதலிய அதிகாரிகள் பிரவேசிக்காமலேயே தீர்வையைவசூல்செய்து கஜானாவிற்கு அனுப்புவது கிராமஉத்தியோகஸ்தர்களுடைய முக்கியகடமையாயிருக்கிறது.

2. தாசில்தார் முதலிய அதிகாரிகள், கிராமஉத்தியோகஸ்தர்கள் கிஸ்திவசூல்விஷயத்தில் சரியாயும், ஜாக்கிறதையாயும் வேலைசெய்துவருகிறார்களாவென்று கவனித்து அப்படிக்கிரமமாக தங்கள் அலுவலை நடத்தாத கிராமஉத்தியோகஸ்தர்களை எச்சரித்தும் தண்டித்தும் உஜார்செய்து வருவார்கள்.

3. எந்த விதத்திலும் கிராமஉத்தியோகஸ்தர்கள் வசூல் விஷயத்தில் சோம்பலாகயிருந்தால் அது அவர்களுக்கு முக்கிய ஆபத்தாகும்.

4. அப்போதைக்கப்போது ஏற்பாடாகிறபடி சர்க்கார் பாக்கியானது பலாணமாதங்களில் செலுத்தப்படவேண்டுமென்று தீர்மானிக்கிறார்கள்

5. எந்தெந்த மாதங்களில் செலுத்தும்படி ஏற்பாடானாலும் அந்தந்த மாதத்திய வீதத்தொகையை அந்தந்தமாதம் 10-உக்குள் பாக்கிதாரர்கள் செலுத்திவிடவேண்டும்.

6. 10-உக்குமேல் நிற்கும் பாக்கித்தொகைதான் கிஸ்திபாக்கியென்றுபெயர்.

7. கொஞ்சகாலமாக தஞ்சாவூர் முதலிய சில ஜில்லாக்களில் கிஸ்திபாக்கிக்கு டிமாண்டு பிறப்புவிக்கும் அதிகாரத்தை பரீக்ஷார்த்தமாகக்கிராமமுன்சீபுகளுக்குக்கொடுத்துவருகிறார்கள். அதில் திருப்திகரமாய் வேலை நடந்துவந்தால் அந்த அதிகாரத்தை ஸ்திரமாய்க்கிராமமுன்சிபுகளுக்குக் கொடுத்துவிடுவார்கள்.

8. டிமாண்டுபிறப்புவிக்கும் அதிகாரத்தைக்கிராமமுன்சீபுகளுக்குக் கொடுப்பதில் ரொம்பவும் சௌகரியமும், நன்மையும் உண்டு. எப்படி

வெளியில்:—அடிக்கடி பாக்கி ஜாப்தா தயார்செய்துகொண்டு டிமாண்டில் கையெழுத்துவாங்குவதற்காக தாலூகாவிற்குப்போகவும் அதைப்பதிந்து கொண்டு தாசில்தாரோ அல்லது ஹெட் அக்கௌண்டெண்டோ கையெழுத்துச்செய்துகொடுக்க, அதைப்பெற்றுக் கொள்வதற்குள் அதற்காக கிராமமுனிசிபு தாலூகா கச்சேரியில் இரண்டொருநாள தங்கவும் அதற்காகத் தாலூகாவுக்கு ஒருதடவைபோய்வர படிச்செலவும் தாமதமும் உண்டாகிறது.

9. அதில் டிமாண்டானது தாசில்தார் அவர்களுடைய கையெழுத்துச்செய்வதில் ஒருவிசேஷமும் அல்லது அவசியமும்இல்லையென்றுசொல்லலாம். கணக்குப்படி எவ்வளவு பாக்கியிருக்கிறதோ அதற்கு ஜாஸ்தியாகவாவது கம்மியாகவாவது டிமாண்டு பிறப்பிவித்துக்கொள்ளயாதொரு ஞாயமுமில்லை. அது விஷயத்தில் எப்போதும் ஒரேமாதிரிதான்.

10. தவிர கிராமமுனிசிபுகளே டிமாண்டு பிறப்புவித்துக்கொள்வதில் வீண் அலைச்சல், தாமதம், படிச்செலவு இவைகளகிராமமுனிசிபுகளுக்கு லாபமாவதோடு தாலூகா உத்தியோகஸ்தர்களுக்கு அவ்வேலையில் ஏற்படும் கஷ்டம் நிவர்த்தியாகிறது.

11. தாசில்தார் அவர்களிடம் டிமாண்டுபெற்றுக்கொள்வதில் அதற்கு சொல்பகாலத்திற்குக்கெடுக்கொடுப்பதும் வேண்டுமானால்கெடு ஒத்திக்கேட்பதற்காகப்பின்னும் தாசில்தார் அவர்களிடம் கிராமமுனிசிபு செல்வதில் காலமும், படிச்செலவும் வீணாகச்செலவாகின்றன.

12. ஆகையால் டிமாண்டு பிறப்புவிக்கும் அதிகாரத்தை ஸ்திரமாய் கிராமமுனிசிபுகளுக்கே கொடுக்கும்படி எல்லாத்தாசில்தார்களும் கலெக்டர்களும் சிபார்ஸ் செய்வது மேலான காரியம்.

13. வசூல்வேலையை ஒவ்வொரு கிராமத்திலும் ஒருஇடம் நிர்ணயித்துக்கொண்டு அதாவது கிராமக்கச்சேரியாக ஏற்படுத்திக்கொண்டு அந்த இடத்திலேயே வழக்கமாய் நடத்திவரவேண்டும். அந்தப்படியே செய்துவரவேண்டுமென்று 100-ம் நம்பர் போர்டுஸ்டாண்டிங்ஆர்டரிலும் விதிக்கப்பட்டிருக்கிறது.

14. அப்படி ஒரேஇடத்தில் வசூல்வேலையைவைத்துக்கொள்வதில் அனேக நன்மைகள் இருக்கிறது. அவையாவன:—

(a) கிஸ்தி செலுத்தவேண்டியவர்கள் கிராமமுனிசிபை அங்கங்கே போய்த்தேடி அலையாமல் குறிப்பிட்ட இடத்தில் கொண்டுவந்து பணத்தைச்செலுத்தலாம்.

(b) கிராமமுனிசிபும் வீடுவீடாகப்போகவும் அங்கங்கே பணத்தைப்பெற்று அதைக்காப்பாற்றுவதிலும் ரசீது கொடுக்கத்தடைப்பட்டு சங்கடப்படுவதும் நேரிடாது.

(c) ஆகையால் போர்டார் அவர்களுடைய ஸ்டாண்டிங் ஆர்டரின்படி ஒரேஇடத்திலிருந்து கொண்டு பணத்தை வசூல் செய்துவரும் வழக்கத்தை ஸ்திரப்படுத்திவரவேண்டும்.

* (d) ஓரிடத்திலேயே வசூல்செய்கிறதென்ற வழக்கத்தை இரண்டொருமாதம் கிராமமுனிசீபுகள் கட்டாயப்படுத்தி அமலுக்குக்கொண்டுவந்தால் அதன் விபரத்தை எல்லா ரயித்துகளும் நன்றாய்த் தெரிந்துகொண்டு அந்தப்படியே நடந்துகொள்ளுவார்கள்.

15. சகஜமாய் 10உக்குள் செலுத்தாத பாக்கிதாரர்களுக்கு டிமாண்டு பெற்றுக்கொண்டு முதலில் அவர்களுடைய ஜங்கமசொத்துக்களை ஜப்திசெய்து ஏலம்போடவேண்டியதற்கு 3-ம் நெ. ஏலநோட்டீசு தயார்செய்து தாசில்தார் அவர்களுக்கு அநுப்பவேண்டும்.

16. ஜங்கமசொத்து ஜப்திவிஷயத்தில் கிராமமுன்சீபுகள் (அல்லது அஸிஸ்டெண்டு மணியக்காரர்கள்) தாங்கள் செய்யவேண்டிய வேலைகளை அதிக ஜாக்கிரதையாகவும் சரியாகவும் நடத்திக்கொள்ளவேண்டும். இந்த நடவடிக்கை மிகவும் பொறுப்பும் ஜவாப்புதாரியுமானது.

17. பாக்கிதாரர்களில் அனேகர் ஒவ்வொருமாசமும் முதல்தேதிமுதல் "நாளைக்குச்செலுத்திவிடுகிறேன் மூன்றும் நாள் செலுத்திவிடுகிறேன்" என்று தினந்தோறும் சல்ஜாப்புப் சொல்வார்கள். பின்னும் கண்டித்துக் கேட்டால் இருசால் தினத்தில் கட்டாயம் செலுத்திவிடுவதாகச் சொல்லிக்கொள்வார்கள். அந்தப்படி இருசால் தினத்தில் கேழ்க்கும்பக்ஷத்தில் பலகாரணத்தினால் தவறிவிட்டதாகவும் கட்டாயம் அடுத்த இரண்டாவது இருசாலுக்குப்பணம் செலுத்திவிடுவதாகவும் சொல்லுவார்கள்.

18. அதையும் நம்பி அடுத்த இரண்டாவது இருசால் (25-ம்தேதி என்று வைத்துக்கொள்வோம்) தினம் கேட்டால் தானியம் வாத்தகாளிடத்தில் கொடுத்திருப்பதாகவோ, அல்லது கடன் கொடுப்பதாகச்சொன்னவர் தவறிவிட்டார் என்றோ பெரியதகவல்சொல்லி சென்றமாதத்தில் 28உ இருசால் செய்கிறதற்குள் அந்தப்படி செலுத்திவிடுகிறேன் தயவுசெய்து அதுவரையில்பொறுத்துக்கொள்ளுங்கள் என்று சமாதானம் சொல்லுவார்கள்

19. மிகவும் தயாளகுணமுள்ளவர் என்று கிராமத்தார்களால் அழைக்கப்படும், அந்தக்கிராமமுனிசீபு மிகவருத்தத்துடன் அதற்கும் இணங்கி 28உ வரையில் காத்திருந்து அன்று தினம் கிஸ்திப்பணத்தைக் கேழ்க்க எத்தனித்தால் அதற்கு முதல்நாளே சல்ஜாப்புச்சொன்ன பேர்வழி தலைமறைவாகயிருந்துவிடுவான்.

20 ஐயோபாவம் இப்படித்தயாளகுணமுள்ளவராயிருந்த கிராமமுன்சீப்பு என்ன செய்வார் மனவருத்தத்துடன், மேற்படி பாக்கிதாருடைய வீட்டுக்குச்சமீபத்தில் சேர்க்கட்டியிருக்கும் பாக்கிதாருடைய தானியக்குவியலை ஜப்திசெய்வதைவிட வேறு மார்க்கம் இராது.

* இத்துடன் அச்சிட்டு அனுப்பிக்கொண்டிருக்கும் வர்ணத்தாள் நோட்டீசை முன்சீப், மணியக்காரர்கள் பணம் செலுத்துபவர்களுக்கு கொடுக்கும் கச்சாத்துடன் சேர்த்து ஒட்டி அனுப்பினால் அதுசங்கதி சீக்கிரம் அமுலுக்கு வரும்.

21. மேலேசொன்ன தானியக்குவியலை ஜப்திசெய்வதென்றால் அளக்கமரக்காலும், சேரைப்பிரிக்கவும் தானியத்தை வெளிப்படுத்தவும் 10, 20, ஆள்களும் அளவு காரனும், வண்டியும் வேண்டியதுடன் பந்தோபஸ்து செய்ய அசாமிகளும் வேண்டும் அது தவிர அவர்களுக்குத்தக்கபடி போதுமான சம்பளம் கிராமமுனிசிபு கையிலிருந்து உடனே கொடுக்கவும் வேண்டும்.

22. அப்படி வெகு சிரமத்துடன் ஜப்திசெய்த தானியங்களைத் தம் வசப்படுத்தியாதொரு பந்தோபஸ்தான இடத்திற்குக் கொண்டுபோய்ச்சேர்த்தானவுடனே இது வரையில் சால்ஜாப்புச்சொல்லிவந்த அயோக்கியனான பாக்கிதாரன் கிராமமுனிசிபுக்கும் தனக்கும் கெடுகோளாயுள்ள விரோதத்தினால் அக்கிரமம் செய்துவிட்டதாகத் தாசில்தார் அவர்களிடம் மனுக்கொடுக்க ஆரம்பிப்பான்.

23. பிறகு ஜப்திசெய்த கிராமமுனிசிபு வசத்திலிருக்கும் தானியத்திற்கு எவ்விதத்திலாகிலும் கெடுதிசெய்ய யுக்திசெய்வான்.

24. அப்படி அவன் செய்யும் யுக்தி பலித்தால் கிராமமுன்சிபிற்குப் பெருத்த சங்கடமும் கஷ்டமும் நேரிடும்.

25. ஆனதால் கிராமமுனிசிபுகள் தாங்கள் ஜங்கமசொத்தை ஜப்தி செய்யும் ஒவ்வொரு கேசிலும் வெகு ஜாக்கிரதையாயும் சரியாயும் நடத்துகொள்ளவேண்டும்.

26. தான் ஜப்திசெய்யும் ஒவ்வொருவகை சொத்தையும் சரியாய் அளவிட்டும் மதிப்பிட்டும் கைப்பற்றி ஜப்திகணக்கில் எழுதி அதின் நகல் ஒன்றைபாக்கிதாரனுக்குக் கொடுக்கவேண்டியது. ஜப்தி கணக்கில் நகலைப்பெற்றுக்கொண்டதாகக் கையெழுத்துவாங்கலாம்.

27 பாக்கிதாரன் ஆஜரில்லாவிட்டால் ஜப்திக்கணக்கின் நகல் ஒன்றை ஜப்திதேதி முதல் மூன்று நாளுக்குள்ளாகப்பாக்கிதாரன் வழக்கமாய் வாசஞ்செய்யும் இடத்திலாவது அல்லது சொத்து ஜப்திசெய்யப்பட்ட இடத்திலாவது ஒட்டவாவது கொடுத்துவிடவாவது வேண்டும்.

28. ஜப்தி செய்யப்பட்ட சொத்தானது ஆடு மாடு முதலிய எவ்விதபிராணிகளாயிருந்தாலும் அவைகளைப்பந்தோபஸ்தாய்க்கட்டிவைத்து அதற்கு வேண்டிய தீனியைப்போடவும், தண்ணீர்காட்டவும், போதுமான மனிதர்களை நியமித்து நியாயமான செலவுகளையும் அவனுக்குச்சம்பளமும் கொடுக்க ஏற்பாடுசெய்து போஷிக்கவும், பந்தோபஸ்து செய்யவும் வேண்டும். அவைகளை வெளியில் கொண்டுபோய் மேய்ப்பது கெட்டவழக்கம். ஏனெனில், காணமற்போகவாவது திருட்டுப்போகவாவது சில அபாயகரமான தொற்று வியாதிகளாவது சுலபமாய் நேரிடவும் கூடும்.

29 தானியமுதலிய சொத்துக்களாயிருந்தால் சொத்தின் மதிப்பிற்கு ஏற்றபடி ஒருவனையோ அல்லது பலபேர்களையோ நியாயமான

அளவு தக்கமனிதர்களை நியமித்து அவர்களுக்கு நியாயமான சம்பளம் பேசி சொத்தைக்களவு முதலிய சேதப்படாமல் காவல் செய்வித்துக் காப்பாற்ற வேண்டும்.

30. நிலத்தில் விளைந்துகொண்டிருக்கும் மகசூலாகயிருந்தால் விளைநிலத்தைக்காப்பதற்குப்போதுமான சம்பள ஆசாமிகளை நியமித்துக்காவல் செய்யவேண்டும்.

31. ஐப்திசெய்த மகசூல் அறுவடையாகாமல் இருந்தாலும், அறுவடைசெய்யத்தகுந்த காலமானாலும் அவைகளை ஐப்திசெய்த கிராமமுனிசிபு கிரமப்படி ஏலநோட்டீஸ் ஜாரியானதின்பேரில் ஏலம் போடும்படி செய்யலாம்.

32. ஏலம் போடப்படுவதற்குள் தயாராயிருக்கும் மகசூலை அறுவடைசெய்வது தனக்கு யுக்தமாகத்தோன்றினால் அத்தப்படியே அறுவடைசெய்வித்து விற்பனையாகிற வரையில் தகுந்தவிடத்தில் சேர்த்துவைக்கலாம்.

33. அப்படி அறுவடையானதற்குப்பி[illegible]செலவுகளைச்சொத்தக்காரன்சொத்தை மீட்டுக்கொள்ளும்பக்ஷத்[illegible] அவன்கொடுத்து மீட்டுக்கொள்ளவேண்டியது.

34. அப்படிக்கில்லாமல் சொத்[illegible]போடப்படும் பக்ஷத்தில் ஏலத்தில் வருமான தொகையிலிருந்து எடு[illegible]க்கொள்ளவேண்டியது.

35. ஐப்தியானபிறகு ஏலம்போடக்குறிப்பிட்டதினத்துக்கு முதல்நாள்வரையில் எந்தக்காலத்திலாவது பாக்கிதாரன் பாக்கியையும் ஐப்திசெய்தது முதல் அன்றையதினம் வரையிலுள்ள நியாயமான செலவுகளையும் செலுத்துவதாக பாக்கிதாரன் சொன்னால் உடனே பெற்றுக்கொண்டு சொத்தை விடுதலைசெய்து சொத்துக்குடையவனிடம் ஒப்புவிக்கவேண்டும்.

36. பாக்கித்தொகையில் ஒரு பாகத்தையாவது செலவுதொகையை அல்லாமல் சர்க்கார்பாக்கியை மாத்திரமாவது தான்செலுத்துவதாகச்சொல்லி, ஐப்தி சொத்தில் ஒருபாகத்தையாவது முழுமையுமாவது தனக்கு ஒப்புவிக்கும்படி சொத்துக்குடையவன் கேட்டால் கிராமமுனிசிபு அந்தப்படி செய்யக்கூடாது.

37. ஐப்திசெய்யப்பட்ட ஆடு மாடு முதலிய பிராணிகளிடத்தில் கிராமமுனிசிபு வேலைவாங்கவும் கூடாது. ஐப்திசெய்த சாமான்களைக் கையாளவும் (உபயோகப்படுத்த) கூடாது.

38. ஐப்தி சொத்தானது போதுமான ஜாக்கிரதையோடு காபந்து செய்யப்படாததினாலாவது அவைகளிடத்தில் அயோக்கியமாய் வேலைவாங்கினதினாலாவது, உபயோகித்ததினாலாவது சொத்து திருட்டுப்போனாலும், காணாமற்போனாலும, சேதப்பட்டாலும், எந்தக்கிராமமுனிசிபினுடைய அஜாக்கிரதையினாலாவது, கடத்தையினாலாவது அப்படி நேரிட்டதோ அவர் அதற்கு ஜவாப்பு செய்யவேண்டும்.

39. அப்படி நஷ்டப்பட்டதற்கு ஈடாகவேண்டிய தொகையை அப்படிப்பட்ட கிராமமுனிசீபினிடமிருந்து கலெக்டரால் சம்மேரியாக வசூல் செய்து நஷ்டமடைந்தவனுக்குக் கொடுக்கப்படும்.

40. ஜப்திசொத்தைப் பாக்கிசூலானதின்பேரில் சொத்துக்குடையவனிடத்தில் ஒப்புவிக்கும்போது சொத்தைப் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாகத் தகுந்த ஜாக்கிறதையோடு ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும்.

41. அப்படிப்பட்ட ரசீதை நேரில் சொத்துக்குடையவனிடத்தில் மாத்திரம் பெற்றுக்கொள்ளலாமே தவிர சொத்துக்குடையவனுடைய குமாஸ்தா காரியக்காரன் அல்லது எவ்விதமான வேலைக்காரனிடத்திலாவது ரசீதுபெற்றுக்கொண்டு சொத்தை ஒப்புவிக்கக்கூடாது.

42 பந்து என்ற காரணத்தினாலும் சொத்துக்குப்பாத்தியஸ்தனல்லாதவனிடத்தில் சொத்தை ஒப்புவித்து ரசீது பெற்றுக்கொள்ளக்கூடாது.

43. அவ்விதமாகச்செய்யப்படும் கேசுகளில் ஒருவேளை சொத்துக்குடையவன் தாவாசெய்தால் அப்படித்தவறிப்போன கிராம முனிசீபு நஷ்டாயம் பாத்தியப்படும்படி நேரிடும்.

44. சொத்தை ஜப்திசெய்தபிறகு எலம் போடப்படுமுன் செலுத்தவேண்டிய பாக்கிவகையறாவை சொத்துக்குடையவனுடைய பாக்கிதாருடைய வேலைக்காரர் முதலியவர்கள் செலுத்துவதாகச்சொன்னால் பணத்தைப்பெற்றுக்கொண்டு ஜப்திசொத்தை அவர்களிடம் ஒப்புவிக்கக்கூடாது.

45. ஏனென்றால் அவர்களுக்கு ரசீது கொடுத்து ஜப்திசொத்தைப் பெற்றுக்கொள்ள பாத்தியமில்லை ஆனால் அப்படிபட்டவர்கள் சொந்தக்காரனிடத்தில் சட்டப்படி அதிகாரப்பத்திரம் பெற்றிருக்கும்பக்ஷத்தில் உடனே பணத்தை வசூல்செய்துகொண்டு அவர்களிடம் ரசீது வாங்கிக்கொண்டு சொத்தை ஒப்புவித்துவிடவேண்டியது.

46. ரசீதுகொடுத்து ஜப்திசொத்தை ஒப்புக்கொள்ளபாத்தியஸ்தன் தயாராயில்லாதபோது வேறு எவனாவது பாக்கிமுதலிய செலவுகளைச் செலுத்துவதாகச்சொன்னாலும் அதைப்பெற்றுக்கொள்ளாமல் ஜப்திசொத்தை எலம்போடுவதற்கே வைத்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

47. ஒப்புவிக்கப்படுகிறசொத்தானது மதிப்பில் இருபது ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்டிருக்கும் பக்ஷத்தில் அதைப்பெற்றுக்கொள்ளும சொந்தக்காரன் ஒரு அணாஸ்டாம்பு ஒட்டி ரசீது கொடுக்கவேண்டியது.

48. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் லேபிள் ஒட்டாமல் ரசீது பெற்றுக்கொள்வது ஸ்டாம்பு ஆக்ட்டுக்கு விரோதமென்பதைக் கிராமமுனிசீபு கவனிக்கவேண்டியது.

கிருஷிநிதி.

தஞ்சை ஜில்லாக் கலெக்டரவர்கள் நமது ஆனரேபிள் மிஸ்டர் P. இரத்தினசபாபதிப்பிள்ளையவர்களைக் கிருஷிநிதிவிஷயமாய்ச் சிலகேள்விகள் கேட்டதற்கு அவர்கள் பின்வருமாறு பதிலனுப்பினார்கள் :—

கிராமங்களில் நிலங்கள் வைத்துச் சாகுபடி செய்யும் ஒவ்வொரு மிராசுதாரரும் கவர்ன்மெண்டு கிஸ்தியைத் தங்கள் நிலங்களிலுள்ளபலன்கள் கைக்கெட்டி விலைக்கு விற்றுச் சாவகாசமாய்க் கிஸ்தி செலுத்திவர முடியாமலபலன் நிலங்களிலிருக்கும்போதே கிஸ்தி செலுத்தவேண்டியதாக விதிகளிருப்பதால் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள்போன்ற முதலாளிகளிடம் தங்கள் வயல்களிலிருக்கும் பலன்களைக்குறைந்த விலைக்கு விற்பனை செய்தோ அல்லது, ஜாஸ்தி வட்டிக்குக் கடன் வாங்கியோ கிஸ்திசெலுத்தவேண்டியிருப்பதால் மிராசுதார்கள் விசேஷ கஷ்டத்துக்கும நஷ்டத்துக்கும் ஆளாகி வருகிறார்களென்றும், அந்தக் கஷ்ட நிலைமையிலிருந்து மிராசுதார்களை நிவர்த்திக்க அங்கங்குள்ள தாலூகா டவுன்களிலாவது கிருஷிநிதிகள் ஸ்தாபனம் செய்யவேண்டிய தவசியமென்றும அப்படி ஸ்தாபிக்கப்படும் கிருஷிநிதிகள்தாசில்தார், டிப்டிகலெக்டர்கள் முதலான பொறுப்பேறிய கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களின மேற்பார்வையிலிருந்து வரவேண்டியதென்றும அந்தக் கிருஷிநிதிகளில் எல்லா மிராசுதாரர்களும அவரவர்களால் பங்கு எடுத்துக்கொள்ளக்கூடிய பங்குகளை எடுத்துக்கொள்ளும்படிச் செய்ய வேண்டுமென்றும் பிறரால் அந்தநிதியில் பணம் போட்டுவரக் கேட்டுக்கொள்ளப்பட்டால் வருஷவாரிக்கு 100 ரூபாய்க்கு 6-ரூபாய் வீதம் போடப்படும் பணத்துக்கு வட்டி கொடுப்பதாக எடுத்துக்கொள்ள வேண்டியதென்றும ஒருவருஷத்திற்குட்பட்டுப் பணம போட்டு வருவோருக்கு வருஷத்துக்கு 100-க்கு 5-ரூபாய் வீதம் வட்டி கொடுப்பதாக எடுத்துக்கொள்ளவேண்டியதென்றும் இந்த நிதியிலிருந்து மிராசுதார்களுக்குத் தகுந்த பூஸ்திதியின்மேலாவது அல்லது தக்க சொத்துக்காரர்களுடைய உடன் கையெழுத்தின் மேலாவது அல்லது நகை சட்டின்மேலாவது வருஷம 1-க்கு ரூபாய் 9 வட்டிக்குமேல்படாமல் கடன் கொடுக்கவேண்டியதென்றும் இந்த லேவாதேவி நடவடிக்கைகளில் ஸ்டாம்புக்கோர்ட்டுச்செலவு முதலியவைகள் விசேஷச்செலவுக் கேதுவில்லாமல் செய்துகொள்ள

வேண்டியதென்றும் இந்தமாதிரியான கிருஷிநிதி நடவடிக்கைகள் மைசூர்ச்சமஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டுச்சீராய் நடைபெற்றுவருகின்றனவென்றும் பிள்ளையவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

மதராசில் வீட்டுவரி.

சென்னப்பட்டணத்தில் புதிதாகச் செய்யப்போகும் கால்வாய் (சாக்கடை) ஏற்பாட்டிற்குப் பிடிக்கும் செலவுகளுக்கு முனிசிபாலிட்டியார் கையிலிருக்கும் தொகைபோக பாக்கித்தொகையை கவர்ன்மெண்டார் கடனாகக்கொடுத்து உதவிபுரியவேண்டுமென்று முனிசிபல் கவுன்சிலர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதற்குககவர்ன்மெண்டார் இப்போதிருக்கும் வீட்டுவரியை இன்னும உயர்த்தி அதனால் அதிகரிக்கக்கூடிய பணத்தை கால்வாய்செலவு நிதிக்குச் சேர்த்துக்கொள்ளச் சொல்லியிருந்தார்கள். இவ்விபரீதமான உத்தரவைக்கேள்விப்பட்ட வீட்டுச்சுவந்தராதாராகள் ஆங்காங்குள்ள டிவிஷனில் கூட்டங்கூடி இப்போது வீடுகளின்பேரில் போடப்பட்டிருக்கும் வரியேபளுவாக யிருக்கின்றது—இன்னும் வரி உயர்த்தப்பட்டால் சுமையைத்தாங்கமுடியாது—மேலும் வீடுகளில் ஜனநெருக்கம உண்டாய்விடுமென்று அனேக முகாந்திரங்களைச் சொல்லி கவர்னர் அவர்களுக்கு (மாக்ஷிமைதங்கிய ஸர் ஆர்தர் ஹாவ்லாக் அவர்கள்காலத்தில்) ஒரு ஆக்ஷேபனை மனுச்செய்து கொண்டார்கள். முனிசிபல் கமிஷனர்களும இது விஷயமாக ஒரு கூட்டம் கூடி வரியை உயர்த்துவது உசிதமாயிருக்கமாட்டாது என்று தீர்மானஞ்செய்து கவானர் நிர்வாகசபைக்கு அனுப்பினார்கள். பொதுஜனங்களும், ஜனங்கள் பிரதிநிதிகளாகிய முனிசிபல் கமிஷனர்களும ஏகோபித்து ஆக்ஷேபனை செய்திருக்கும விஷயத்தைக் கவர்ன்மெண்டார் அங்கீகரித்து வீட்டுவரியை உயர்த்தவேணடுமென்ற ஏற்பாட்டைத்தங்கள மனதைவிட்டு அகலச்செய்வார்களென்றும எண்ணியிருந்தோம. சர் ஆர்தர் ஹாவ்லாக் அவர்கள் மரத்திலும் படாமல் மாங்காயிலும் படாமல் இதைப்பற்றி யாதொன்றும் முடிவாய்ச்சொல்லாமல் பயணமாய் விட்டார்கள். இவ்வளவு[illegible]சென்று கவர்ன்மெண்டார் பிடித்த பிடிவாதத்திலேயே ஊர்ச்சிதமாயிருந்து வீட்டுவரிகளை இன்னும் நூற்றுக்கு இரண்டரை அதிகமாக உயர்த்தும்படி

பிறப்பித்திருக்கும் கவர்ன்மெண்ட் ஆர்டரைக்கண்டு ஆராத்துயர மடைகிறோம்.

கவர்ன்மெண்டு ஆர்டர்:— சாக்கடை ஏற்பாட்டிற்காக வேண்டிய வருஷாந்தரச்செலவுக்கு இப்போதிருக்கும் பணம் போக பாக்கிப்பணத்தை சேகரிக்குபபொருட்டு, கட்டடங்கள் மீதும், நிலங்களின்மீதும், அவைகளின் வருஷாந்திர கிரையத்தில் 100-க்கு 4-வீதம தற்காலம் போடப்பட்டிருக்கும் வரிக்குப்பதிலாக ஜலசுகாதாரவரி என்று 100-க்கு 6½ விகிதம் போட வேண்டுமென்று கவர்ன்மெண்டார் செய்திருந்த தீர்மானத்தை முனிசிபல் கௌன்சிலர்களும் சென்னையிலுள்ள ரேட்பேயர்களாகிய வரி செலுத்துவோர்களும் ஆக்ஷேபித்து அனுப்பிய முறையே தீர்மானத்தையும் மனுக்களையும கவர்ன்மெண்டார் வாசித்துப்பார்த்தார்கள் இம்மனுக்களில் எடுத்துக்கூறப்பட்டிருந்த முகாந்திரங்களை ஜாக்கிறதையாய்க் கவனித்தபிறகும், இதற்காக பிரத்தியேகமாக ஒரு முடிவானவரி போடுவது கூடாமையான விஷயமென்று சிந்தனைசெய்தும், ஏற்கனவே பளுவாக யிருக்கிற சுங்கவரியை யுயர்த்துவது உசிதமான விஷயமல்லவென்றும், சிலர் ஆலோசனை சொன்னதுபோல சாராயக கடைகளின்மீது போடப்பட்டிருக்கும் வரிவிகிதத்தை மாற்றுவதற்குக் கூடாமலிருப்பதாலும் மாக்ஷிமைதங்கிய கவர்னர் சபையார் தாங்கள் ஏற்கனவே செய்த தீர்மானத்தின் பிரகாரம் வீட்டுவரியை உயர்த்த சட்டப்பிரமாணம் செய்ய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று எண்ணுகிறார்கள். ஆயினும், கால்வாய் ஏற்பாட்டிற்கும் எவ்வளவு செலவுகள் தேவையோ அதற்குமேல் இப்போது போடப்பட்டிருக்கும் விகிதத்தை உயர்த்துவது அவசியமாகயிருக்கமாட்டாதென்று கமிஷனரவர்கள் அறிவிக்கப்படுகிறார்கள.

தஞ்சாவூர் ரெயில்வேக்கடன்.

தஞ்சாவூர் ஜில்லாவில் புதிதாக ரெயில்போடுவதற்காக அந்தஜில்லாபோர்டார் 20 லட்சம் ரூபாய் கடன்வாங்கப் பிரயத்தினம்செய்து வந்திருந்த டெண்டர்களை யுடைத்துப்பார்க்கையில் 9,17,000 ரூபாய்க்கு மட்டுந்தான் டெண்டர்கள் அங்கீகரிக்கப்படக்கூடியனவாயிருநதன. டெண்டர்களின் சராசரி விகிதம் ரூபாய் 95-3 அதேதினத்தில் கவர்ன்மெண்ட் 3½ வட்டிப்ப

த்திரங்கள் ரூ. 94-8-க்கு போனபடியால் தஞ்சாவூர் ஜில்லா போர்டாருக்குக் கிடைத்த விகிதம் குறைவென்று சொல்லக்கூடாது. ஆனால் வேண்டிய மொத்தத்தொகைக்குக் கம்மியாகக் கடன் கிடைத்தது மட்டும் விசனிக்கத்தக்கது. சென்னை முனிசிபாலிடியார் இந்தியாக் கவர்ன்மெண்டாருக்குக் கொடுக்கவேண்டியதற்காகச் சேர்த்து வைத்திருக்கும் தொகையாகிய 9 லட்சம் ரூபாயை $3\frac{1}{2}$ வட்டியுள்ள கவர்ன்மெண்ட் பத்திரங்களாயிருப்பதை 4 வட்டி கொண்ட தஞ்சாவூர் ஜில்லாபோர்டார் வாங்கும் கடனுக்குக் கொடுக்கலாமென்று யோசனைசெய்து இந்தியாக் கவர்ன்மெண்டாருடைய சம்மதத்தை முனிசிபாலிடியார் கேட்க, சம்மதிக்க மாட்டோமென்று கவர்ன்மெண்டார் மறுத்து விட்டார்கள். வருஷ ஆரம்பத்தில் வர்த்தகர்கள் பலமாய் நடக்கிற காலமானதாலும், விவசாயிகள் ஸர்க்கார் வாயிதா செலுத்துகிற காலமானதாலும், பணம் கிடைப்பது கஷ்டம். இந்தக்காலத்தில் தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் போர்டார் கடன்வாங்க முன்வராமல், ஜூன் மாதத்துக்குப்பிறகு முன் வந்திருப்பார்களானால், சுலபமாய் வேண்டியபணம் கிடைக்கக்கூடியது. ஆகிலும் இப்போது கிடைத்திருக்கும் 6,17 000 ரூபாயைக்கொண்டு ரெயில்போடும் வேலை ஆரம்பிக்கப்பட்டால், இன்னும் காலேந்து மாதத்துக்கெல்லாம் ஜில்லாபோர்டாருக்கு வேண்டிய பாக்கித்தொகை எளிதில் கிடைக்கக்கூடியது.

முன்சீபு மணியகாரர்களுக்கு ஓர் எச்சரிக்கை.

கிராமமுன்சீபுகளே! மணியக்காரர்களே!! தாங்கள் பாக்கிதாரர்களுடைய் ஜங்கமசொத்துக்களை ஜப்திசெய்ய நேரிடும்போதெல்லாம் அவைகளை தாங்கள் நேரில் கைப்பற்றி தங்கள் சுவாதீனத்தில் பந்தோபஸ்து செய்துவைத்துக்கொள்ளவேண்டியது. அவைகளை பாதுகாப்பதற்கும் போதுமான மனிதர்களை தாங்கள் நியமித்து அவர்களுக்குக்கிரமமான சம்பளம்கொடுத்து சொத்தைகாப்பாற்றிவைத்து, பணம் செலுத்தப்பட்டால் அப்போது சொத்துக்குடையவனிடம் ஒப்புவித்து ரசீது பெற்றுக்கொள்ளவேண்டியது. அல்லது ஏலம்போட நேரிட்டால் ஏலம்போடுவதற்காகவரும் உத்தியோகஸ்தரிடம் சொத்தை ஆஜர்செய்யவேண்டியது. அப்படிசெய்யாமல் சில கிராமமுன்சீபுகளும் மணியகாரர்களும் ஜப்திசொத்தை வேண்டும்போது ஆஜர் செய்வதாக எழுதிவாங்கிக்

கொண்டு பாக்கிதாரர்களாகிய சொத்துக்குடையவர்களிடத்திலாவது அவர்களுடைய சிநேகிதர்களிடத்திலாவது ஜப்திசொத்தை ஒப்புவித்துக் கடைசியில் திண்டாட்டப்படுகிறார்கள். இது மிகவும் நியாயவிரோதம் இப்படி ஒழுங்கீனமான காரியத்தைச்செய்து தங்களுக்குத்தாங்களே சிலகிராமமுன்சிபுகளும் மணியகாரர்களும் துன்பத்தைத்தேடிக்கொள்கிறார்கள்; திருஷ்டாந்தமாக:—தஞ்சைஜில்லா திருத்துருப்பூண்டித் தாலுகா 36 நெ. புத்தூர் வட்டம் கிராமமுன்சிபு வெங்கடாசலபடையாச்சி என்பவர் மேற்படி கிராமத்தின் பாக்கிதாரனாகிய ஒருவரிடம ஜப்திசெய்த ஜங்கமசொத்தை அந்தப்பாக்கிதாரிடமே விட்டுவைத்து வேண்டும்போது ஆஜர்செய்வதாக எழுதிவாங்கிக்கொண்டார். பிறகு ரிவினியூ இன்ஸ்பெக்டர் மேற்படி ஜப்திசொத்தை ஆஜர் செய்விக்கும்படிமேற்படி கிராமமுன்சிபைக்கேட்டவுடன் அவர் மேறபடி பாக்கிதாரனை ஜப்திசொத்தை தன்னிடம் ஒப்புவிக்கும்படி கேட்டதற்கு அந்தப்பாக்கிதார் ஒப்புவிக்கமாட்டேன் என்று வீண்வம்புபேசி மறுத்துவிட்டார். இக்குற்றத்திற்காக ஷை கிராமமுன்சிபை 1900-ளு நவம்பர், டிஜம்பர் இந்த இரண்டுமாதம் சஸ்பெண்டு செய்தார்கள். எவ்வளவு சுலுவாய் மேற்படி கிராமமுன்சிபு தனக்கு சஸ்பெண்டு சிக்ஷையை தருவித்துக்கொண்டார் பாருங்கள்? இதைப்பார்த்த மற்ற கிராமமுன்சிபுகளும் மணியகாரர்களும் தங்களுடைய நடத்தையைச் சீர்படுத்தி எச்சரிக்கையாக நடந்துகொள்வார்களென நம்புகிறோம்.

பிள்ளைகளை முன்னுக்குக்கொண்டுவரும்வழி.

உலகத்தில் மனிதர்கள் அடையத்தக்கபேறுகளில் நல்லபிள்ளைகளைப் பெறும்பேறு எல்லாவற்றினும் மேலாயது. (பெறுமவற்றுள்யாமறிவதில்லை யறிவறிந்த மக்கட்பேறல்லபிற) என்றும் நாயனாரால் கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் ஒருவன் எவ்வளவு மற்றச்செல்வங்களைப்பெற்றானாயினும் புதல்வர்ப்பேறு அற்றானாயின் அவன் உலகத்தில் பாக்கியசாலியென்று கூறப்படான். ஆகவே ஒருவனுக்குப்புண்ணியவசத்தால் புத்திரருண்டாயின் அவர்களை நல்லநிலைமைக்குக்கொண்டுவரும்கடன் பெற்றோரைச்சார்ந்தது பிள்ளைகளை அணிகளாலும், துணிகளாலும் அலங்கரித்து சிகை முதலியவற்றை அழகுபடுத்தி அவர்களிடத்திருக்கும் ஆசைப்பெருக்கத்தால் இளம்பருவத்தில் அவர்கள்செல்லும்வழியாய்விடுதல்பயனற்றதையும்

பிற்காலத்தில் பெருங்கேட்டைத்தரத்தக்கதாயும் இருக்கும். அல்லாமலும் ஒருவன் பிள்ளைக்குவேண்டுமென்று நிலம், வீடு, பணம் முதலிய பலபொருள்களை ஈட்டிவைத்தலும் அவை நிச்சயமாய் அப்பிள்ளைக்கே உரியதாக மாட்டாது. ஆகையால் இத்தகைய தந்தைகள் தம் பிள்ளைகளுக்கு உதவிசெய்பவர்கள் ஆகமாட்டார்கள். (தந்தைமகற்காற்று நன்றியவையத்து முந்தியிருப்பச்செயல்) என்று கூறியபடி ஒரு பிதாவானவன் தன் பிள்ளைக்குக்கல்வியென்னும் ஒப்பற்ற ஒரு பொருளைச்சம்பாதித்துவைக்கவேண்டும். அதுதான் அப்பிள்ளைக்கு நிச்சயமாய்த்துணைப்பட்டிருக்கும் பொருளாகும். ஆகையால் ஒருவன் என்ன தரித்திரதசையை அடைந்தானாயினும், எவ்வகையினாலாவது தன் பிள்ளைக்குக்கல்விகற்பிக்கவேண்டும். அவ்வாறு கல்விகற்பிப்பதனால் அப்பிள்ளை கற்றதன்மேல் கல்வித்தேர்ச்சியினால் நற்குணம் நற்செய்கைகளையுடையவனாவானென்றிராமல் கல்விபயிற்றுதல்போலவே தீயநெறிகளிற்செல்வதைத்தடுத்து நற்குணம் நற்செய்கைகளில் சிறந்து விளங்கும்பொருட்டும் தந்தை பாடுபடவேண்டும். கல்வியில் வல்லவனாயிருக்கும் ஒருவன் ஒழுக்கத்திலும் சிறந்திருக்க மாட்டான்.

(இன்னும் வரும்)

வர்த்தமானம்.

திரிசிராப்பள்ளியில் காலராபரவிக்கொண்டு வருகிறதாம்.

***

இராமேஸ்வரம் தேவஸ்தானம் மானேஜ்மெண்டை இராமநாதபுரம் சேதுபதி மஹாராஜா அவர்கள் ராஜிநாமாக்கொடுத்துவிட்டார்கள்.

***

கையொப்பநேயர்களுக்கு:— இப்போதே கிராமாதிகாரி 3-வது சஞ்சிகையை அச்சுக்குக் கொடுத்துவிட்டபடியால் அதிசீக்கிரம் வெளியாகும்

***

மாக்ஷிமைதங்கிய மஹாராணியாரின் மரணத்தைக்கேட்டு எதிரிகளான போவர்களும் துக்கங்கொண்டாடினர்.

***

போவர்சண்டை முடிந்தவுடன் லார்டு கிச்சனர் இந்தியாவின் சேனாதிபதியாக நியமனம் அடைவாராம்.

***

அரிசியில் மனிதருடைய இரத்தவிர்த்திக்கு வேண்டிய சத்துக்களிருக்கிறதென்று டாக்டர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

சுயம்பாகவே பூமியினின்று பூனுவில் ஓர் சிவலிங்கம் தோன்றியிருக்கிறதாம். அச்சிவபிரானைத் தரிசிக்கவேண்டுமென்றே கும்பல் கும்பலான ஜனங்கள் அங்கு செல்கிறார்களாம்.

* * *

மெட்ரிகுலேஷன் பரீக்ஷை:— சென்ற டிஸம்பரில் நடந்த இப்பரீக்ஷையில் தேறியவர்களின் ஜாப்தாவைப்பார்க்க மிகவும் வருந்துகிறோம். ஒருவருஷமும் இவ்விதம் குறைந்த ரிஸல்ட்டு வெளியாகவில்லையாம்.

* * *

திருநெல்வேலி ஜில்லாவில் ஸப்மாஜிஸ்திரேட்டு மிஸ்டர் ஸ்ரீ சிவசங்கரரை பொய்ப்பிரமாணக்குற்றத்திற்காக செஷனுக்குக் கமிட்டு செய்யப்பட்டதாய் கேள்விப்பட்டு விசனிக்கிறோம், இவர் இவ்வுத்தியோகத்தையடைந்து சொற்பகாலந்தான் ஆயிற்றாம்.

* * *

சகோதரப்பத்திராதிபர்கள்:— தத்தம் பத்திரிகையைக் கைம்மாறாக இனியாவது அனுப்புவார்களென நம்புகிறோம். அவ்விதம் அனுப்பாதவர்களுக்கு இனி காரும சஞ்சிகையை அனுப்போம்.

* * *

அனேக ஐரோப்பியர்கள் தாங்கள் தமிழில் பேசுவதற்கு மிகுந்த ஆசைப்படுகிறார்கள். நம்மவர்களில் அநேகர் தமிழ்ப்பேசுவது அகௌரவமென்று நினைக்கிறார்கள். இது அதிசயமல்லவா?

* * *

இந்து வித்தியாதன மசோதா:— இந்துக்களில் அநேகர் ஆவலாய் எதிர்பார்த்திருந்தபடி இச்சட்டம் பாசாகாதுபோனது எல்லோருக்கும் சந்தோஷமே.

* * *

மகாராணியார் அவர்களின் ஆத்மா திருப்திஅடையும்பொருட்டு இந்தியாவிலுள்ள தேவாலயங்களிலெல்லாம் 10 நாள் வரையில் மோக்ஷதீபங்கள் ஏற்றப்பட்டன.

* * *

புது உத்தியோக நியமனம்:— விவசாயவிருத்திக்காக இந்தியா மந்திரியவர்களால் ஒரு இன்ஸ்பெக்டர் ஜெனரலை நியமிக்கப்போகிறாராம். இவருக்கு இருப்பிடம் டேராவென்னுமூரை உத்தேசித்திருக்கிறது. கவர்ன்மெண்டு விவசாய ரசாயன சாஸ்திரியாராகிய டாக்டர் லெதர் என்பவர் இந்தப் புது உத்தியோகஸ்தர் கையின்கீழ் வைக்கப்படுவார்.

* * *

ஸானிடெரி கமிஷனர் டாக்டர் கிங்:— டிஸ்ட்ரிக்ட்போர்டுகள் அற்பமான சம்பளத்தில் அறிவற்றவர்களை ஸானிடெரி இன்ஸ்பெக்டர்களாக வைத்துக்கொண்டிருப்பதை வெறுத்து நல்ல சம்பளம் கொடுத்து கௌரவமானவர்களைக்கொண்டு காரியத்தை நடத்துவது உசிதமென்று வற்புறுத்தியிருக்கிறார். ஓஹோ நன்மையே. இப்படிச்செய்துவிட்டால் டிஸ்டிரிக்ட் போர்டு, முனிசிபாலிட்டி இவற்றில் பரீக்ஷை தேறாத மெம்பர்கள் அல்லது கவுன்ஸிலர்களின் அபிமான மனுஷ்யாளுக்கு என்னகதி.

பலரும் கவனிக்கத்தக்க ஓர் அறிவிப்பு.

கனம்பொருந்திய ஐயன்மீர் !!

நான் சிவக்ஷேத்திரம், விஷ்ணுக்ஷேத்திரம், சுப்பிரமணியக்ஷேத்திரம், முதலிய க்ஷேத்திரங்களின் மகிமை முதலியவைகளைப்பற்றி ஒரு புத்தகம் எழுதிப்பரோபகாரமாய் அச்சிடவேண்டுமென்று எனது சிற்றறிவிற் கெட்டாத இப்பெருங்காரியத்தைப் பலநல்லொழுக்கம் சிவஞானச்செல்வ முதலியவை நிறைந்துள்ள சனதனவான்களின் பேருதவியைக்கொண்டு முடிக்கலாமென்று எண்ணங்கொண்டு இக்காரியத்தில் முயற்சியெடுத்து எழுதிவருகின்றேன். அவ்விதம் முடிப்பதற்கும், பேற்வு வேணுமாயி [illegible]ரியம் பரமபதியின் புகழ் என்பதுபற்றியும், அடியார்கள் யாத்திரை செய்வதற்குச்சாதகமான நேத்திரம்போன்ற சாத்திரமாயுள்ளதுபற்றியும் ஒருவாறு துணிந்தேன். ஆதலின், அவரவர்கள் தங்கள் தங்கள் உண்மையுள்ள சிநேகர் முதலியோரைக்கொண்டாவது, தாங்களே நேரிலாவது, தங்கள் இருப்பிடத்திற்கு சமீபமாயுள்ள சைவ, வைஷ்ணவ, சுப்பிரமணிய க்ஷேத்திரங்கள், மூவர் முதலியோர் பாடலுள்ளதாகவாவது புராதனமுள்ளதாகவாவது, வைப்புத்தலங்களாகவாவது இருப்பின் அவ்வத்தலங்களுக்கு என்னிடத்துள்ள பத்திரிகையில்கண்டபடிக்குள்ளவேண்டிய விவரங்கள் முழுமையும் உண்மையாய் விசாரித்து ஒரு தலத்தின் சரித்திரத்தை வாசித்தால் பிறரை யாதொன்றும் கேட்டறிந்துகொள்ளாமல், அச்சரித்திரத்தினாலேயே தெரிந்துகொள்ளும்படியாயும், நேரில்பார்த்தது போலிருக்கும்படியாகவும், உண்மையாகவும், நிரம்பவும் விரிவாகவும், எழுதியனுப்பவேண்டியதுடன், திசை, தூரம், மார்க்கம்முதலியவற்றிற்கு ஒரு படமும் தயார்செய்து அனுப்பவேண்டுமென்றும், இவ்விதத்தொந்திரவு கொடுத்ததைப்பற்றி மன்னிக்கும்படிக்கும், வணக்கமாய்க்கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,
மு. சாம்பசிவ நாயனார்,
சாலியமங்கலம்.

"GRAMATHIKARI."

A MONTHLY JOURNAL.

CONTAINING MATTERS OF INTEREST FOR VILLAGE OFFICERS & OTHERS.

It goes without saying that the ryot is the backbone of the material prosperity of a country like India, which is pre-eminently agricultural. The prosperity of the British Empire in India is inseparably bound up with the prosperity of the Indian agriculturist. For gaining this end, village affairs should be effectually controlled by the Revenue Divisional Officers and the Tahsildars by hearing not only their version of the village affairs but also by listening to the voice of the millions through *organs that exist for that one purpose*. The "GRAMATHIKARI" will supply this long-felt want and will contain information, facts and hints to Village and Divisional Officers for improving the tone of the village administration which is at present full of loopholes, much to the detriment of the prosparity of the ryot. A copy of this journal will be sent to all Magisterial and Revenue Divisional Officers every month, who it is hoped will encourage and support the undertaking by recommending it to the patronage of all Taluq and Village Officials in their jurisdiction. The journal will co-operate with, and not be hostile to, the Divisional Officers, for furthering the cause of the ryot and for improving rural sanitation, economics, industries and agriculture, and interpreting properly the rulers to the ruled and *vice versa*.

RATES OF SUBSCRIPTION.

Yearly, Village Officers	Rs. 3.
Others	Rs. 4.
Patrons	Rs. 10.

All communications to be addressed to:—

S. KOTHANDAPANI THANJARAYAR,
"Proprietor of the Gramathikari,"
Manakudy, Tirutoraipundi Taluk,
Tanjore District.